Registered as a magazine in Sri Lanka

நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை – 51 சித்திரை, 2022 பக்கங்கள் – 24 விலை – ரூபா 20.00

சிங்கள முற்போக்கு சக்திகளை ஊக்குவிப்போம்

- காலி முகத்திடல் போராட்டத்தை விளங்கிக் கொள்ளல்
- IMF இனால் வரப் போகும் துன்பம்
- இலங்கையின் பொருளாதார நெருக்கடியை புரிந்து கொள்ளல்

ஆய்வு – அறிவு – நிமிர்வு

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை புரிந்து கொள்ளல்

– செல்வின் –

இலங்கை தற்போது எதிர் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் சரியான புரித லொன்றை எட்டுவதற்காக சமூக பொருளாதார ஆலோசகர் செல்வின் அவர்கள் அளிக்கும் விளக்கம் வருமாறு.

இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளா தார நெருக்கடிக்கு ராஜபக்ச குடும்பத்தின் ஆட்சிக் காலம் தான் முக்கிய காரணம் என்கிற கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. என்னுடைய வாதம் ராஜபக்ச குடும்பத்தை நியாயப்படுத்துவதாகவோ அல்லது பிணையெடுப்பதாக அல்ல. ஆனால், இன்று இலங்கை அடைந்துள்ள மிக மோசமான நிலை மைக்கு சுதந்திரத்துக்கு பின்னரான சுதேசிய அரசாங் கங்கள் எல்லாமே பொறுப்பு. அன்றிலிருந்து இந்த சுதேசிய அரசாங்கங்கள் இந்த தேசத்துக்கான தொலைநோக்கு இல்லாமலே தாங்கள் ஆட்சி அதி காரத்தில் இருக்க வேண்டும் என்பதற்கான தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி எறிந்து இனக்குரோத உணர்வுகளை வன்மங்களை மக்கள் மத்தியில் வளர்த்து இந்த நாட்டை சிதைத்தார்கள்.

தொலைநோக்கு இல்லாத தலைமைத்துவம் தான் இந்த தேசத்தின் அடிப்படையான பிரச்சினை யாக இருந்து வந்துள்ளது. நாற்பத்தைந்துகளின் பின்பு இங்குள்ள சுதேசிகளின் கைகளில் ஆட்சியைக் கொடுக்க பிரித்தானியா ஆலோசித்த போது, இலங் கையை ஒரு முன்மாதிரி குடியேற்ற நாடாக அவர்கள் கற்பனை செய்தார்கள். அந்தளவுக்கு இலங்கையில் மனிதவளம், அறிவு வளம், நிர்வாக வளம் எல்லாமே சிறப்படைந்து இருந்தது. ஆங்கில கல்வி மூலம் கல்வி கற்ற கணிசமான தொகையினர் பொது நிர்வாகத் துறையிலும் அரசாங்கத் துறைகளிலும் நிபுணத் துவத் துறைகளிலும் தங்கள் ஆற்றல்களை கொண்டு தேசத்தை கட்டியமைக்க கூடியவர்களாக இருந்தார் கள்.

இலங்கையில் மட்டுமல்லாது மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் சென்று பணி யாற்றக் கூடிய அளவுக்கு சிறப்பாக செயற்பட்டார் கள். சுதந்திரத்துக்கு பின்னரான காலகட்டங்களில் இலங்கையை பார்த்த எல்லோருமே பல அறிவுசார் புத்திஜீவிகள் கூட தங்கள் கட்டுரைகளில் இலங்கை ஒரு உன்னதமான நாடாக மிளிரப் போகிறது என்று எழுதி இருக்கின்றார்கள். இலங்கையின் கல்வி வளர்ச்சி வீதமும் கணிசமான அளவு அதிகரித்து இருந்தது. இலங்கையின் நிர்வாகத் துறைகளிலும் ஏனைய துறைகளிலும் இருந்தவர்கள் அரசுக்கு மிக விசுவாசமாக பணியாற்றக் கூடிய நேர்மையை கொண்டிருந்தார்கள். இந்த தேசம் உன்னத நிலையை நோக்கி நகரப் போகிறதாக கனவு கண்டார்கள்.

இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னரான கால கட்டங்களில் தான் மலேசியாவில் இருந்து சிங்கப்பூர் பிரிய வேண்டி வந்தது. சிங்கப்பூர் பிரியும் போது ஒரு மிகச் சிறிய மிக வறுமையான வளங்கள் எதுவுமே அற்ற ஒரு சிறிய ஊர். சிங்கப்பூரின் பரப்பளவு 728 சதுர கிலோமீற்றர். அது யாழ்ப்பாண குடாநாட்டின் 1126 சதுர கிலோமீற்றர் உடன் ஒப்பிடும் போது மிகச் சிறியது. அத்தகைய சிங்கப்பூரை பொறுப்பேற்கும் போது லீகுவான் யூ, அன்று இலங்கைக்கு வந்து அதனை பார்த்து விட்டு சொன்னார் 'சிங்கப்பூரை நான் இலங்கை போன்று மாற்றுவேன்' என்று. அந்தளவுக்கு இலங்கை மிக உயரத்தில் இருந்தது. நகர்ப்புற சேரிகளும், ஏழை மக்களும், குடிசைகளும் கொண்டதொரு ஊராகத் தான் சிங்கப்பூர் இருந்தது. குடிநீருக்கு கூட சிங்கப் பூர் மலேசியாவில் தங்கி வாழ வேண்டி இருந்தது. ஆனால் ஒரு 20 வருடங்களுக்குப் பிறகு 70 களின் பிற்பகுதியில் இலங்கையின் தலைவர்கள் சொன்னார் கள் நாங்கள் கொழும்பை இலங்கையின் சிங்கப் பூராக மாற்றுவோம் என்று. எங்களுடைய கனவு கொழும்பை சிங்கப்பூராக மாற்ற வேண்டுமாக

இருந்தால் இவர்கள் என்னத்தை பார்த்தார்கள் என்று தான் கேள்வி. அதிலிருந்து இங்குள்ள தலைவர்களின் தொலைநோக்கை புரிந்து கொள்ளலாம்.

லீ குவான் யூ சிங்கப்பூரை பார்க்கும் போது சிங்கப்பூர் மக்களைப் பார்த்தார். மக்களை தொகுதிகளாக பார்த்தார். சுமார் 70 வீதமான மக்கள் சீனர்களாக இருந்து மாண்டரின் மொழி பேசுகின்ற மக்களாக இருந்தார்கள். இந்தியர்கள், மலேயர்கள் போன்ற பல்வேறு இனத்தவர்கள் அங்கே இருந்தார் கள். பல்வேறு மொழிகள் இருந்தாலும் கூட அவர் எல்லோரையும் சிங்கப்பூரின் குடிமக்களாக ஒன்றி ணைத்து நாட்டை முன்னேற்றும் தொலைநோக்கு தான் அவரிடம் இருந்தது. அவர் எல்லா மக்களையும் ஒன்றாக இணைத்தார். அந்த மக்களின் நான்கு மொழி களையும் ஆங்கிலத்தையும் சேர்த்து ஐந்து மொழி களையும் உத்தியோகபூர்வ மொழிகளாக்கி எல்லா மக்களுக்கும் சரிசமமான வாய்ப்பு கொடுத்தார். சிங்கப்பூர் மக்கள் என்கிற குறிக்கோளோடு சிங்கப் பூர் முன்னோக்கி நகர்ந்தது. கடுமையான உழைப்பு, மிக திட்டமிட்ட துல்லியமான செயற்பாடு கள் தான் சிங்கப்பூர் இவ்வாறு முன்னோக்கி சென்றதற் கும் காரணம். சிங்கப்பூரின் தொலைநோக்கில் சிங்கப்பூரின் மக்கள் தான் முன்னின்றார்களே தவிர சிங்கப்பூரின் பௌதீக கட்டுமானங்களும் நிலமும் இருக்கவில்லை. இன்று சிங்கப்பூரின் துறைமுகம் சிங்கப்பூரின் நிலப்பரப்பை விட மிகவும் பெரிது. அந்தளவுக்கு சிங்கப்பூர் மிகவும் அபிவிருத்தி அடைந்து நவீன கட்டிடங்களால் எழுந்து நிற்கிறது. இன்று அங்கே 5 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். அந்தளவுக்கு சிங்கப்பூர் மிகப்பெருமளவு அபி விருத்தி அடைந்த தேசமாக மாறியுள்ளது.

ஆனால் சமகாலத்தில் இலங்கையில் என்ன நடந்தது? இலங்கையில் சுதேசிகளின் கைகளில் அரச அதிகாரம் வந்தவுடன் அவர்களின் சிந்தனை வேறுபட்டதாக மாறியது. சிங்களம், பௌத்தம் என்ற சுலோகங்களை வைத்துக் கொண்டு எவ்வாறு தாங்கள் வாக்கு வங்கியை கட்டி எழுப்பலாம். அதிகாரத்துக்கு விரைந்து வரலாம் என்பதே அவர் களின் நோக்கமாக இருந்தது. இலங்கையை ஒரு தேசமாக கட்டியெழுப்புவதற்கான எந்தவொரு சிந்தனையும் அவர்களிடம் இருக்கவில்லை.

அன்றைய காலங்களில் ஐரோப்பியர் கொண்டுவந்து அறிமுகப்படுத்திய தேயிலை, இறப்பர், கொக்கோ, கோப்பி போன்ற பயிர்கள் மிகவும் செழிப்பாக இருந்தன. அதன் ஏற்றுமதி வருமானம் மிகவும் உயர்வாக இருந்தது. ஆனால் அதற்கு முன்பொரு காலம் இருந்தது. குடியேற்றவாத ஐரோப்பியர் இங்கு வர முன்பு இலங்கைத்தீவின் பொருளாதாரம் மிகவும் செழிப்பாகவே இருந்தது. ஐரோப்பியர் இங்கே வரும் போது கூட அவர்கள் இந்த தேசத்தில் இருந்த வாசனைத் திரவியங்கள், உப உணவுத் திரவியங்களான கராம்பு, கறுவா போன்ற வாசனை திரவியங்களுக்காக தான் இந்த தேசத்துக்கு வந்தார்கள். இவற்றை கொள்வனவு செய்ய வந்தவர் கள் ஒட்டு மொத்தமாக இந்த வளத்தினை கொள்ளை யிட வேண்டும் என்பதற்காக ஆட்சியினைக் கைப் பற்றினார்கள். பின்பு தங்களுக்கு இந்த தீவில் உள்ள பருவகாலம் நில அமைப்பு என்பன சாதகமாக அமைந்தமையினால் தேயிலை, இறப்பர், கோப்பி போன்றவற்றையும் இங்கே கொண்டு வந்து அறி முகப்படுத்தி இந்த தேசத்தின் பொருளாதாரத்தை செழிக்க செய்தார்கள். இவ்வாறு குடியேற்றவாத ஆட்சிகள் தான் எங்களை பெருந்தோட்ட பயிர் செய்கைக்கு கொண்டு வந்தார்கள். அவர்கள் வந்த பின்பு இலங்கையின் பொருளாதாரம் இரட்டைப் பொருளாதாரமாக மாறியது. ஒரு பக்கம் எம் இயல்பான பொருளாதாரமான கிராமியப் பொருளா தாரம். மறுபக்கம் பெருந்தோட்ட பொருளாதாரம். பெருந்தோட்டப் பொருளாதாரம் மிகப்பெரிய வெளி நாட்டு செலாவணியை கொடுத்தபடியால் அதனை வளர்த்தெடுப்பதற்காக தான் வீதிகளை அமைத் தார்கள். பின் அவற்றை தாம் விரும்பும் நாடு களுக்கு கொண்டு செல்வதற்காக தான் ரயில் பாதை கள், துறைமுகங்களை அமைத்தார்கள். எங்கள் கிராமியப் பொருளாதாரத்தை உறங்கு நிலையில் வைத்தார்கள் அல்லது கைவிட்டார்கள்.

நாங்கள் சுதந்திரத்துக்கு பிறகு எம் பொரு ளாதார கொள்கைகளை எங்கள் தேசத்துக்கு ஏற்ற மாதிரி எங்கள் மக்களுக்கு ஏற்ற மாதிரி கட்டமைத் தோமா என்றால் இல்லை என்பதே பதில். 1960 களில் சிறிமா அம்மையார் என்ன செய்தார்? இறப்பரை விற்று சீனாவில் இருந்து அரிசி வாங்கக் கூடியதாக இறப்பர் – அரிசி ஒப்பந்தம் செய்தார். எவ்வளவு

(22 ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

ஆசிரியர் பார்வை

தொடர்ந்தும் நீதியை புறக்கணிக்கும் தீவு

இலங்கையில் உள்நாட்டு நீதி என்பது கிடைக்காது என்பது மறுபடியும் நிரூபிக் கப்பட்டிருக்கிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் நடந்து மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டன. இதுவரை அத்தாக்குதலுக்கு காரணமான வர்களை விசாரித்து, சட்டத்தின் முன்னால் நிறுத்தி தண்டனைக்கு உட்படுத்த சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இவ்வளவு காலமும் இந்த தீவில் தமிழ் மக்கள் மட்டும் தான் நடந்து முடிந்த இனப்படு கொலைக்கு சர்வதேச விசாரணை, நீதி வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். ஆனால் இப்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பின்பு தமிழ், சிங்கள கிறிஸ்தவ மக்களும் சர்வதேச விசாரணையை வலியுறுத்த தொடங்கி விட்டார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சிறிலங்காவின் சட்டம் உரிய முறையில் செயற் படுத்தப்படவில்லை எனில் சர்வதேச நீதிமன்றத் திற்குச் செல்லவுள்ளதாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்தாண்டு தெரிவித்திருந்தார்.

“இதனை தொடர்ந்து தயவுசெய்து நீதியின் மீதுள்ள அன்பினால், உங்கள் மக்கள் மீதுள்ள அன்பினால், இந்த நிகழ்வுகளுக்கு யார் காரணம் என்பதனை ஒருமுறை தெளிவுபடுத்துங்கள். அத்துடன் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிப்படுத்துங்கள். இது உங்கள் மனச்சாட்சிக்கும், இந்த நாட்டுக்கும் அமைதியை தரும்” என கடந்த திங்கட்கிழமை இலங்கை அரசை கேட்டுக் கொண்டுள்ளார் பாப்பரசர் பிரான்சிஸ். இப்போது உலக கிறிஸ்தவ சமூகத்தின் உயர்பீடமே இப்போது இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அவர்கள் கேட்பது எல்லாமே இந்த தாக்கு தல்களுக்கு பின்னணியில் உள்ள மூளை யார்? அவர்கள் இன்னும் ஏன் தண்டிக்கப்பட வில்லை? இந்த தாக்குதலில் பலியானவர்களுக்கு உரிய நீதியை பெற்றுத்தர வேண்டிய அரசாங் கம் அதனை செய்யாமல் இருப்பது ஏன்? மூன்றாண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன. இன்னமும் அவர்களுக்கான உரிய நீதி மட்டும் கிடைக்கவில்லை.

2009 இல் முள்ளிவாய்க்காலில் நடந்து முடிந்த தமிழினப் படுகொலைக்கான நீதியும் தாமதமாகிக் கொண்டே போகின்றது. அதற்கு முன்பும் இங்கே தமிழினப்படுகொலைகள் ஏராளம் இடம்பெற்றிருந்தன. சிறீலங்காவின் உள்நாட்டு நீதிப் பொறிமுறை மீது நம்பிக்கை இல்லை என்ப தனை தமிழ் மக்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி விட்டார்கள். அதற்காக தான் சர்வதேச விசாரணையை கோரி நிற்கின்றார்கள்.

உக்ரேனில் ரஷ்யப் படைகள் செய்த படுகொலைகளுக்காக ரஷ்ய ஜனாதிபதி மீது விசாரணை செய்யப்பட வேண்டும் என்று பல மேற்குலக நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய ஐ.நா. சபை ஒன்றுமே செய்ய முடியாமல் நிற்கின்றது.

ஆகவே இனியும் ஐ.நா. இனூடாக நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மக்கள் இழந்து வருகிறார்கள. ஆகவே, படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதற்காக சிறிலங்கா அரசுடன் அரச ரீதியான உறவு களைப் பேணிக் கொண்டிருக்கும் நாடுகள் தமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது.

சிறிலங்கா அரசுடனான உறவுகளை முறித்துக் கொண்டு அதன் மீது பொருளாதாரத் தடை, பயணத் தடை போன்றவற்றினூடாக நீதி விசாரணைக்கான அழுத்தங்களை கொடுக்க வேண்டும்.

- கெ. கிரிசாந் -

சிங்கள முற்போக்கு சக்திகளை ஊக்குவிப்போம்

– துருவன் –

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை தொடர்ந்து காலி முகத்திடல் போராட்டம் குறித்து பலராலும் பேசப்படுகிறது. இது இலங்கை முழுவதும் உள்ள நெருக்கடி என்றும் இந்தப் போராட்டத்தில் தமிழ்மக்களும் பெருமள வில் இணைந்து கொள்ள வேண்டும் என்கிற கோரிக் கைகளும் ஆங்காங்கே சிலரால் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், தமிழ் புத்திஜீவிகள், அரசியல் வாதிகள் பலரும் இப்போராட்டத்தில் தமிழ் மக்கள் பெருமளவு இணையத் தேவையில்லை என்ற கருத்தை முன்வைத்து வருகின்றனர். ஆனால், இப்போது உண்மையான போராட்டங்கள் காலி முகத்திடலை தாண்டி நாடு முழுவதும் இடம்பெற தொடங்கி உள்ளன.

“இனவாதத்தை மூலதனமாக்கி அரசியலில் ஈடுபடும் சிங்கள அரசியல்வாதிகளை விடவும் சிங்கள புத்திஜீவிகள் மிகவும் மோசமான மகாவம்ச மன நிலையில் இருக்கிறார்கள் என்பதை கோட்டாபய வுக்கு எதிரான போராட்டத்தின் மூலம் அறிய முடி கின்றது. சிங்கள சமூக வலைத்தளங்களில் வெளி யிடப்படும் பதிவுகள் அதனைப் புடம் போட்டுக் காண்பிக்கின்றன. கோட்டாபயவை மாத்திரம் மாற்றி னால் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கிடைக் கும் என்பதல்ல, மாறாக ஈழத்தமிழர்களுடைய அரசி யல் விடுதலை, மலையகத் தமிழர்களின் இருப்பு மற்றும் அரசியல் உரிமைகள், முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் போன்றவற்றை உறுதிப்படுத்தக் கூடிய, அதுவும் மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிங்கள அரசியல் தலைவர்கள் இனவாத நோக்கில் செயற்பட முடியாத வகையில் இந்த சிங்கள அரச இயந்திரத்தில் மாற்றத்தைக் கோர வேண்டும். சிங்கள அரச இயங் திரத்தை மாற்றுவதே சிங்கள மக்களின் எண்ணக் கருவாக இருக்குமானால், இப் போராட்டத்தில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர் கள் மற்றும் முஸ்லிம்கள் பங்குகொள்ள வேண்டு மெனப் பகிரங்க அழைப்பு விடுக்க வேண்டும். அவ்வாறு அழைப்பு விடுக்கப்படுமானால் அதில் நூறுவீத நியாயம் இருக்கும்.” என பத்தியொன் றில் தெரிவித்துள்ளார் இலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளரான அ. நிக்சன்.

65 ஆண்டுகளுக்கு முன்பு 1956 ஆம் ஆண்டு ஆனி மாதம் ஐந்தாம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமிழ்மக்கள் சாத்வீக ரீதியில் காலிமுகத்திடலில் போராடி இரத்தம் சிந்தினார்கள். இலங்கையில் வாழ்கின்ற சிறிய தேசிய இனம் என்ற வகையில் மொழியுரிமை கோரி அவர்கள் அங்கே நடாத்திய போராட்டம் சிங்கள பேரினவாத அரசின் வன்கரம் கொண்டு அடக்கப்பட்டமை வரலாறு. அப்போது தமிழ்மக்கள் தனித்தே அந்தப் போராட் டங்களை அதனை தொடர்ந்து வந்த வன்முறை களையும் எதிர்கொண்டார்கள்.

ஆனால் இன்று உருவாகியிருக்கும் காலி முகத்திடல் போராட்டம் சிங்கள மத்திய தர வர்க்கத் தின் உடனடி பொருளாதார பிரச்சினைகளை அடிப் படையாக கொண்டது. இலங்கையில் காலாகாலமாக புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தமிழ்

மக்களுக்கு ஒரு சரியான அரசியல் தீர்வை முன் வைக்க வேண்டும் என்கிற எண்ணம் அங்கே இருப்ப தாக தெரியவில்லை. கடுமையான யுத்த காலங் களில் இப்படி ஏராளம் பொருளாதார, மருத்துவம் சார்ந்த நெருக்கடிகளை தமிழ்மக்கள் ஒரு சமூகமாக தனித்தே எதிர்கொண்டார்கள். அந்த நெருக்கடி களுக்குள் தற்சார்பு வாழ்க்கையை வாழ பழகிக் கொண்டார்கள். இதனால் தான் இன்று வடக்குக்கும் தெற்குக்கும் இடையே போராட்டங்களில் கூட வேறுபாடு தெரிகிறது.

ஆனாலும் இந்த பொருளாதார நெருக்கடி தமிழ் மக்களையும் பெருமளவில் பாதிக்கின்றது. நாளுக்கு நாள் பல மடங்கு வேகத்தில் அதிகரிக் கின்றன பொருட்களின் விலைகள். எரிபொருள் தட்டுப் பாட்டால் மீனவர்கள் கடலுக்கு சென்று தமது தொழிலை செய்ய முடியாமல் இருக்கிறார்கள். மின்சார வெட்டு காரணமாக பல விவசாயிகள், சிறு கைத்தொழிலாளர்கள் வருவாய் இன்றி தவிக் கிறார்கள். இதையும் தாண்டி நாளாந்த தொழில் செய்யும் பல்வேறு மக்களும் கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளார்கள். ஆகவே இந்தப் போராட்டத்தை எமக்கு சம்பந்தமில்லாத ஒன்று என்று கடந்து விட முடியாது.

சிங்கள மக்கள் மகாவம்ச மனநிலையில் இருந்து விடுபட்டு தமிழ்மக்களும் சக தேசிய இனம், அவர்களும் சம உரிமைகளோடு இத்தீவில் வாழ வேண்டும். என்கிற நிலைப்பாட்டை ஏற்க வைப்பது என்பது சாதாரண விடயமல்ல. இன்று இப்படியான காலிமுகத்திடல் போராட்டங்கள் ஊடாக சிங்கள மக்கள் தமிழ்மக்கள் இத்தீவில் எதிர்நோக்கிய எதிர்நோக்குக்கின்ற பிரச்சினைகள் பற்றி சிறிய அளவிலாவது பேச முற்பட்டுள்ளனர். அடிப்படை பிரச்சினைகள் குறித்து பேச வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு எழுந்துள்ளது. காலம் இப்போது ஒரு தடவை அந்த வாய்ப்பை தந்துள்ளது. அடிப்படை விழிப்புணர்வை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்த நாம் உடனடி வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. அதற்கு சிங்கள முற்போக்கு சக்திகளை ஊக்கு விக்க வேண்டும். ஏற்கனவே உள்ள சிங்கள முற்போக்கு நட்பு சக்திகளின் வட்டத்தை பெரிதாக்கினால் இன்று நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினைகளுக்கான அடிப்படை இனவாதம்தான் என்பதை சிங்கள மக்கள் மத்தியில் இலகுவாக புரிய வைக்க முடியும்.

நிறைவேற்று அதிகார ஆசனத்தில் பைத்தியக் காரன் ஒருவன் அமர்ந்தால் நாட்டின் நிலைமை என்னவாகும் என சிறிமா அம்மையாரின் ஆட்சியில் நிதியமைச்சராக இருந்த கலாநிதி என்.எம் பெரேரா கேள்வியெழுப்பினார். அதற்கு இன்று ஒருவகையில் பதில் கிடைத்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் என் கிற அஸ்திரத்தை வைத்துக் கொண்டு ஜனாதிபதி எப்படியும் செயற்படலாம் என்பதற்கு இன்றைய ஆட்சி முன்னுதாரணமாக நோக்கப்படுகின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அடாவடிகளை அரசியல் யாப்புக்கு ஊடாக கட்டுப்படுத்த முடியாத நிலை தான் உள்ளது. ஆகவே இன்று பிரதான மாக நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பும், சிறீலங்கா அரச அடிப்படைக் கட்டமைப்புகளில் மாற்றமுமே அவசியமாக தேவைப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு நடந்த இனப்படு கொலைக்கு நீதி கேட்டு தமிழ்மக்கள் ஜெனீவாவை தட்டுவதனை சிங்கள அரசியல் தலைமை சிங்கள மக்களிடம் தவறாக விளக்கி வந்துள்ளது. நீதி கோரி தண்டிக்கப்படும் நிலை வந்தால் உங்கள் வீடு களில் உள்ள இராணுவ சிப்பாய்களும் தண்டிக்கப் படும் நிலை உருவாகும் என அவர்களை பயப் படுத்தி வைத்திருக்கிறார்கள். ஒரு வேளை அப்படி ஒரு நிலை வருமாயின் உண்மையில் தண்டிக்கப் படப் போவது இனப்படுகொலை புரிய ஏவிய அரச இராணுவ இயந்திரத்தின் உயர்மட்டத்தினரே. இந்த விடயங்களை கூட சிங்கள மக்கள் மத்தியில் வலுவாக விளக்க வேண்டியுள்ளது.

“இனவாதத்தை மூலதனமாக்கி அரசியலில் ஈடுபடும் சிங்கள அரசியல்வாதிகளை விடவும் சிங்கள புத்திஜீவிகள் மிகவும் மோசமான மகாவம்ச மனநிலையில் இருக்கிறார்கள் என்பதை கோட்டாபயவுக்கு எதிரான போராட்டத்தின் மூலம் அறிய முடிகின்றது”

எங்களிடம் இதுவரை சிங்கள மக்களிடம் மாற்று பொறிமுறை ஒன்றின் மூலம் கருத்துகளை கொண்டு சேர்க்கக் கூடிய இணைப்பூடகம் வலுவாக இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் இந்த நாட்டின் ஒரு அங்கமாக வாழ்வது என்றால் எம்மால் இயன்றவரை ஏதோ ஒரு வழியில் எமது போராட்ட நியாயப்பாடுகளை சிங்கள மொழியில் அந்த மக்களிடம் சேர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும். இல்லாது விடின் காலம் காலமாக புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு எவ்விதமான தீர்வுகளையும் காண முடியாது. இன்று சிங்கள மக்கள் மத்தியில் வேலை செய்யக்கூடிய முற்போக்கானவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி சிறிது சிறிதாக எமது நியாயப்பாடுகளையும் ஏதோ வொரு வகையில் விளங்கப்படுத்த வேண்டும். இதற்குத் தான் தமிழில் இருந்து சிங்கள மொழியில் கொண்டு சேர்க்கக் கூடிய விடயங்களை மொழி பெயர்க்கும் ஒரு தனிப்பிரிவு உருவாக்கம் அவசிய மாகிறது. இது இன ரீதியிலான புரிந்துணர்வுக்கு வழிவகுக்கும். ஏனெனில் தமிழினம் சார்ந்து வடக்கில் நடக்கும் எந்த விடயங்களும் தெற்கில் உள்ள சிங்கள பத்திரிகைகளில் வருவது கிடையாது. எனவே இதற்கொரு மாற்று குறித்து அவசியம் கூடிய விரை வில் சிந்திக்க வேண்டும்.

இனநெருக்கடியை பின்னணியாக வைத்து தமிழில் எழுதப்பட்ட சிறுகதைகளின் சிங்கள மொழி பெயர்ப்பின் தொகுப்பு ஒன்று 'விரிவான உள்ளக ஆய்வு' என்ற தலைப்பில் அண்மையில் வெளிவந்திருக்கிறது. அதனை ஜெகன் கணேசன் என்பவர் மொழி பெயர்த்திருக்கிறார். அந்த தொகுப்பின் விமர்சனம் ஒன்று நிவகல் (nivahal.com) எனப்படும் சிங்கள இணையத் தளத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது. அதில் குறிப்பிடப்படும் சில விடயங்கள் முக்கியமானவை.

"தமிழ் மக்களின் – குறிப்பாக இனப்படு கொலைப் போரில் இருந்தவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் – தென்னிலங்கையில் ஒருபோதும் பிரதிபலிக்கவில்லை. தென்னிலங்கையில் குறிப்பாக இனப்பிரச்சினைகள் தொடர்பான பெரும்பாலான படைப்புகள் இனவாதம் மற்றும் போர் ஆதரவு தன்மையானவை. இவற்றுக்கு எதிரான சில தலையீடு

"இலங்கையில் காலம் காலமாக வேரூன்றி இருக்கும் இனவாதத்துக்கும், மத வாதத்துக்கும் தமிழ் தரப்பிலிருந்து பதிலளிக்க வேண்டியுள்ள கடப்பாடு இப்போது எழுந்துள்ளது"

கள் கூட கருத்தியல் முரண்பாடுகளைக் கொண் டுள்ளன.'

'எனவே தமிழ் சிங்கள மொழிகளுக்கிடையே யான இடைவெளியை முறியடிக்க மொழிபெயர்ப்பு இலக்கியம் ஒன்று இந்நாட்டில் தேவைப்படுகிறது. தமிழ் இலக்கியங்கள் வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் நிறைய உள்ளன. ஆனால் அவை சிங்களத்தில் மொழிபெயர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.'

'தென்னிலங்கையில் இராணுவத்தினரால் போற்றப்படும் போர்க்கால பிரசாரக் கட்டுரைகளைத் தவிர, வடக்கு மக்களின் உண்மையான வாழ்க்கை தென்னிலங்கைக்கு கடத்தப்படாத சூழலில் ஜெகன் கணேசனின் மொழிபெயர்ப்பு முயற்சி மிகவும் முற்போக்கானது. இந்தச் சிறுகதைகள் மூலம் இந் நாட்டில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் எதிர்நோக்கும் பல உண்மையான பிரச்சினைகளை எழுத்தாளர் களால் கலை ரீதியாக மீள் உருவாக்க முடிந்துள்ளது'. என குறிப்பிடப்பட்டுள்ளது.

காலம் நமக்கொரு வலுவான வாய்ப்பை தந்திருக்கிறது. இந்த நேரத்தில் எங்கள் பிரச்சினை களை சாதாரண சிங்கள மக்களுக்கு சரியான விதத்தில் சொல்ல வேண்டிய நேரம் வந்துள்ளது. இலங்கையில் காலம் காலமாக வேரூன்றி இருக்கும் இனவாதத்துக்கும், மத வாதத்துக்கும் தமிழ் தரப்பி லிருந்து பதிலளிக்க வேண்டியுள்ள கடப்பாடு இப்போது எழுந்துள்ளது. இதற்கு சிங்கள முற்போக்கு சக்திகளை திரட்டி வேலை செய்வதே காலப் பொருத்தமானது.

காலிமுகத்திடல் போராட்டத்தை விளங்கிக் கொள்ளல்

இன்றைய காலிமுகத்திடல் போராட்டம் தொடர்பில் தமிழ் புலமையாளர்களும், செயற்பாட்டாளர்களும் சமூக வலைத்தளங்களில் பல்வேறு காத்திரமான கருத்துகளை முன்வைத்து வருகின்றார்கள். அதில் அரங்க செயற்பட்டாளரும், படைப்பாளியும், சமூக விமர்சகருமான ஞானதாஸ் காசிநாதர் முகநூலில் முன்வைத்த கருத்துகள் வருமாறு.

01. "Go Home Gota" போராட்டத்தில் பங்கு பெறும் தமிழர்களை இங்கு யாரும் தடுத்த நிறுத்தப் போவதில்லை. அது அவரவர் உணர்வு, அரசியல் விழிப்புணர்வு, புரிந்துணர்வு சார்ந்த விடயம்.

ஆனால்... இந்த "Go Home Gota" போராட்டத்தில் தமிழர் தரப்பில் இருந்து போதிய பங்களிப்பு கொடுக்கப்படாததை சில "புரட்சிகர" தமிழர்கள் நையாண்டி செய்வதையும் கண்டனம் தெரிவிப்பதையும், தமிழர்களை ஒரு பிற்போக்குச் சமூகமாகச் சித்தரிப்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

அதென்னடாப்பா, எல்லாருடைய உணர்வுகளையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று பாடம் எடுக்கிற இந்தப் புரட்சியாளர்கள், முற்போக்கு சக்திகள், ஜனநாயக சக்திகள் தமிழ் மக்களின் உணர்வுகளை மட்டும் புரிந்து கொள்ளத் தயங்குகிறார்கள்? "Go Home Gota" போராட்டம் எந்த அரசியல் கட்சிகளினதும் தலையீடு அற்ற தன்னெழுச்சியான மக்கள் போராட்டம் என்பது எவ்வளவு உண்மை என்பது எனக்குத் தெரியாது.

ஆனால், பெரும்பாலான தமிழ் மக்கள் "Go Home Gota போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருப்பது எவ்வித அரசியற் கட்சிகளினதும் தலையீடு இல்லாத அவர்களது சுயமான முடிவும் உணர்வும் என்பது 100 சதவீதம் சத்தியமான விடயம் ஆகும்.

தமிழர்களின் அத்தகைய தன்னெழுச்சியான உணர்வை எவ்வாறு நீங்கள் கொச்சைப்படுத்த முடியும். அதுதான் உங்கள் புரட்சிகர குணாம்சமா? முற்போக்குத்தனமா? ஜனநாயகப் பண்பா?

இந்த நாட்டில் எல்லோரையும் விட மிக நீண்ட போராட்ட வரலாற்றைக் கொண்டவர்கள் தமிழர்கள் ஆவர்.

எந்தச் சமூகம் அதிக போராட்டங்களை முன்னெடுக்கிறதோ அந்தச் சமூகமே அதிக அரசியல் விழிப்புணர்வு கொண்ட சமூகமாகப் பரிணமிக்கும்.

அந்த வகையில் தமிழர்களுக்குத் தெரியும் எதற்கு எப்படி எப்போது போராட வேண்டும் என்று. தமிழர்களுக்கு எந்த அரசியல் கட்சியும் வழி காட்டத் தேவையில்லை. 2009 க்குப் பிறகு தம் அரசியல் தலைமைகள், கட்சிகளின் கடிவாளத்தைப் பிடித்திருப்பவர்களாக எமது மக்களே இருக்கிறார்கள். அந்த வல்லமை எமது 30 வருட போராட்டதின் ஊடாக கிடைக்கப் பெற்றது. அந்த வல்லமையும் ஆளுமையும் எமது மக்களிடம் இருப்பதால் தான் எமது பாராளுமன்ற அரசியல் கட்சிகளால் 2009 க்குப் பின்னர் தாம் நினைத்தது போல் எந்த மோசடியையும் நிறைவேற்ற முடியாமல் உள்ளது. இல்லையேல் அவர்கள் எம்மை எப்பவோ விற்றுப் பிழைத்திருப்பார்கள்.

இன்றுவரை எம்மைக் காப்பாற்றி வருவது எமது போராட்ட வரலாறும் போராட்ட அனுபவங்களும் தான்.

இந்த இக்கட்டான சூழலையும் கடந்து செல்லும் வல்லமையை அது எமக்குத் தந்துள்ளது. எதற்காகப் போராட வேண்டும், எதை சும்மா இருந்து பார்க்க வேண்டும் என்பதை தமிழர்கள் நன்கு அறிவர்.

---

02. ஒரு தம்பி கேட்டார்,

"Go Home Gota" போராட்டத்தில் சில தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கலந்து கொள்கிறார்கள், ஆதரவு தெரிவிக்கிறார்கள். அது பற்றி நீங்கள் என்ன என்ன சொல்கிறீர்கள்?

என் பதில்!

அப்படி ஒரு சிலர் பங்குபெறுவதும் ஆதரவு கொடுப்பதும் மிகச் சரியான முடிவு!

அந்தத் தம்பி சொக்கிப் போனார்.

நான் தொடர்ந்தேன், அப்படிக் கலந்து கொள்ளும் தமிழர்களிடமும் அறிந்தோ அறியாமலோ ஒரு அரசியல் விழிப்புணர்வு உள்ளது. அதை நான் மதிக்கிறேன். அவர்கள் சொல்லும் காரணங்கள் மேலோட்டமானதாகவும் அற்பத்தனமாகவும் இருக்கலாம் ஆனால் அவர்களுடைய ஆழ்மன அரசியல் விழிப்புணர்வு தான் அவர்களையும் இயக்குகிறது.

அவர்கள் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளையும் தமிழர்களின் மீதான ஒடுக்குமுறைகள் பற்றியும் அந்தக் கூட்டத்தில் வாய் திறக்கப் பயப்படலாம். அல்லது தம் சிங்கள சகோதரர்கள் நண்பர்களின் மனதைப் புண்படுத்தக்கூடாது என்பதற்காக அது பற்றி வாய் திறக்காமல் இருக்கலாம்.

ஆனால் அவ்வாறு ஒரு சிலர் அங்கு நிற்பது சிங்களச் சகோதர சகோதரிகளுக்கு ஒரு தூண்டு தலைக் கொடுக்கிறது. மிச்சத் தமிழர்களையும் போராட்டத்துக்குள் இழுக்க வேண்டும், என்ற எண்ணத்தைத் தூண்டுகிறது. இழுக்க முடியும் என்ற நப்பாசையைத் தூண்டுகிறது. தமிழரின் பிரச்சினைகளையும் தாம் கோசம் போட வேண்டும் என்ற உணர்வைத் தூண்டுகிறது. சிலர் உண்மையாகவே தமிழர் பிரச்சினையை உணரவும் வழி செய்கிறது.

அந்தத் தம்பி கேட்டார்.

“அப்ப நீங்கள் ஏன் தமிழர்கள் சும்மா பார்ப்பதுதான் நல்லது என்கிறீர்கள்?”

ஆம். ஒரு சிறு பகுதியினர் போராட்டத்தை ஆதரிக்கும் அதே வேளை பெரும் பகுதியினர் சும்மா இருப்பதுதான் சரி. ஒரு புறம் அவர்கள் எமக்காகவும் குரல் கொடுக்கத் தூண்ட வேண்டும் மறுபுறம் எங்கள் பிரச்சினை உங்கள் பிரச்சினையை விடப் பாரதூரமானது, அதைத் தீர்க்காமல் உங்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதையும் உணர்த்த வேண்டும். உண்மையில் அடிப்படைப் பிரச்சினையை சிங்களச் சகோதர்களுக்கு உணர வைப்பது அவ்வளவு எளிதல்ல.

எனக்கு நிறையச் சிங்கள நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் பெரும் பெரும் ஆளுமைகள். பிரசித்தி பெற்றவர்கள். யாரும் ராஜபக்ஷக்களை ஒரு போதும் ஆதரிக்காதவர்கள். இனவாதத்துக்கு எதிரானவர்கள். பல்வேறு நவீன

“எந்தச் சமூகம் அதிக போராட்டங்களை முன்னெடுக்கிறதோ அந்தச் சமூகமே அதிக அரசியல் விழிப்புணர்வு கொண்ட சமூகமாகப் பரிணமிக்கும்”

கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்கள், பேசுபவர்கள். அவர்களும் எனக்குமான உறவு மேலோட்டமானதும் அல்ல. ஒன்றாக உண்டு, குடித்து, படுத்து, எழும்பும் வரை நெருக்கமானது. கண்ணியமானவர்கள். நாகரீகமானவர்கள். அன்பானவர்கள். எனக்கு உதவிகள் பல செய்யக் கூடியவர்கள்.

ஆனால், அவர்களை அறியாமலே சிங்கள மேலாதிக்கத்தை நாம் ஏற்கும் வகையில் அல்லது அனுசரித்துப் போகும் வகையிலேயே எம்முடன் பக்குவமாக நடந்து கொள்வார்கள். ஏனெனில், சிங்கள் மேலாதிக்க குணாம்சம் என்பது அவர்களின் அறிவு, அரசியல் விழிப்புணர்வு என்பவற்றைத் தாண்டிய ஆழ்மன (Subconscious mind) விடயமாக ஆழப்பதிந்து விட்டது. அறிபூர்வமான உரையாடல்கள் தேடல்கள் மூலம் அவர்களாலேயே அதை உடைக்க முடியாது. அவர்களது ஆழ்மனதைப் பயங்கரமாகத் தாக்கக்கூடிய அனுபவங்களை அவர்களுக்கு உண்டாக்குவதன் மூலமே அதை உடைக்க முடியும். வேறு வழியில்லை. மனதைக் கல்லாக்கிக் கொண்டு ஒரு சத்திர சிகிச்சை வைத்தியர் போன்று நாம் கடும் போக்கையே கடைப்பிடிக்க வேண்டியுள்ளது.

எனவே, தமிழர்களில் ஒரு சிறு பகுதியினர் இந்தப் போராட்டத்தை ஆதரிப்பதும் பெரும் பகுதியினர் விலகியிருப்பதுமே தமிழர்களின் ஒட்டு மொத்த தந்திரோபாய நகர்வாக இருக்க முடியும். அந்த வகையில் எது நடக்கிறதோ அது சரியாகத்தான் நடக்கிறது. நடந்ததும் அப்படியே. நடக்கப் போவதும் அப்படியே!

போராடுபவர்களுக்கும் போராடாது இருப்பவர்களும் என் வாழ்த்துகள்.

---

03. “யாதும் ஊரே யாவரும் கேளிர்!”

முக்கியமாக “Go Home Gota” போராளீஸ் கேளும்!

***கேளிர் = உறவினர்

வர வர, இந்த நாட்டிலே ஏதோ தமிழர்கள் தான் இனவாதிகள் என்ற மாதிரியான ஒரு கருத்தி யல் கட்டமைக்கப்பட்டு வருகிறது.

தனிநாடு கேட்டவர்கள் தமிழர்கள் தான், SO, அவர்கள்தான் இனவாதிகள் மற்றவர்கள் எல்லாரும் இன, மத பேதமின்றி வாழ விரும்பும் ஜனநாயக வாதிகள்.

இந்த தமிழர்கள் இன்னும் இனத் துவேசத் தோடு நடந்து கொள்கிறார்கள் என்ற மாதிரியான பல பதிவுகளை (தமிழர்களின்) நான் அடிக்கடி பார்க்கி றேன்.

அட பயலுகளா, தமிழரின் அடிப்படைக் கோட்பாடே: "யாதும் ஊரே யாவரும் கேளிர்!"

இதை விட வேறொரு கோட்பாடோ, புனித நூலோ தமிழர்களிடம் இல்லை. ஐம்பெரும் காப்பியங் களையும், அகநானூறு புறநானூறு போன்ற வாழ் வியல் வழிகாட்டிகளையும், திருக்குறள் என்னும் உலகப்பொதுமை தத்துவத்தையும் படைத்த எம் மூதாதையர் ஒருபோதும், "இது உன் தேசம், இது இறைவனால் உனக்கு வழங்கப்பட்ட பூமி. இதை ஆள வேண்டியதும் காக்க வேண்டியதும் உன் கடமை. ஏனைய இனங்களை அடக்க வேண்டியதும் உன் பொறுப்பு" என எந்த நாட்டையும், தேசத்தையும் ஊரையும், எங்களுக்குக் காட்டவில்லை. அத் தகைய போதனைகளையோ புனித நூல்களையோ எமக்கு அவர்கள் கையளிக்கவுமில்லை. சொன்ன தெல்லாம் ஒன்றே ஒன்றுதான்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்!"

தனிநாடு என்பது தமிழரின் "இனவெறியில்" இருந்து பிறந்தது அல்ல. அது இலங்கை தீவின் அனைத்து இனங்களினதும் விமோசனத்துக்கும், விடுதலைக்குமான விஞ்ஞானபூர்வமான யதார்த் தமான பொறிமுறையாக எழுந்த ஒரு கோட்பாடு.

சற்றுச் சிந்தியுங்கள், சிங்களமும் தமிழும் தனித் தனி தேசங்களாக இருந்திருந்தால், நாட்டைக் கட்டியெழுப்ப எந்த ஒழுங்கான திட்டமும் இல்லாத, வெறும் இனவாதத்தை வைத்தே வடைசுடும், கொள் ளையடிக்கும் ராஜபக்ஷக்கள் போன்ற கும்பல்கள் ஆட்சிக்கு வந்திருக்க முடியுமா?

1948 இல் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் காலனித்துவதுவ ஆட்சியாளர் களிடமிருந்து விடுபட்ட போது, சிங்கப்பூர் தலைவர் களின் கனவாக இருந்தது என்ன தெரியுமா?

"சிலோன் போன்ற சொர்க்க பூமியாக சிங்கப் பூரை மாற்ற வேண்டும்!" அத்தகைய அனைத்து வளமும் கொண்ட ஒரு அழகிய, ஒப்பீட்டளவில் பணக்கார நாடாக இலங்கை இருந்தது. ஆனால், 1978 இல் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர் அன்றைய சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ ஐச் சந்திக்கும் போது சொன்ன வார்த்தை, **"நான் இலங்கையைச் சிங்கபூர் போல் ஆக்கப் போகிறேன்"** 30 ஆண்டுக்குள் சிங்கப்பூர் சொர்க்க பூமியாகிவிட்டது. இலங்கை கெட்ட பூமி ஆகியது. ஏன்?

சிங்களப் பேரினவாதம்!

அப்போது சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ அவர்கள் ஜே.ஆரிடம் சொன்ன வார்த்தை, "நல்லது. அதற்கு முன்னர் உங்கள் நாட்டின் இனப்பிரச்சினையை நல்லவிதமாகத் தீருங்கள். அப்போதுதான் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்!" ஆனால், ஜே.ஆர் அதை நல்லவிதமாகத் தீர்ப்பதற்குப் பதிலாக கெட்டவிதமாகவும், தந்திரமாகவும் தீர்க்க முற்பட்டார். அதன் விளைவை இலங்கை இன்று காண்கின்றது.

இனப்பிரச்சினையை கெட்ட விதமாகவும் தந்திரமாகவும் தீர்த்துவிடலாம் என்ற சிங்களத்தின் "மோடைப் புத்திதான்" ராஜபக்ஷக்களின் எழுச்சி! இன்று ராஜபக்ஷக்களை எதிர்த்தாலும் இனப்பிரச் சினையை கெட்டவிதமாகவும் தந்திரமாகவும் தீர்த்து விடலாம் என்ற சிங்களத்தின் "மோடைப் புத்தி" இன்னும் மாறவில்லை என்பதுதான் யதார்த்தம். ஆனால் எமது கோட்பாடும் தத்தவமும் கொள்கையும் எப்பவும் ஒன்றே,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்!"

---

04. அடேயப்பா எத்தனை தரம் சொல்றது?

நாங்கள் ஒண்டும் யாரையும் போராட வேண்டாம் என்று தடுத்து நிறுத்தவில்லை. அப்படி யாரையும் இங்கு தடுத்து நிறுத்த முடியாது. ஏனெனில்

இங்கு நடப்பது தன்னெழுச்சி. அவனவன் உணர்ச்சி. அதை யாரும் வார்த்தைகளாலோ, அறிவூட்டல் களாலோ மாற்ற முடியாது. அதே மாதிரித்தான் போராடாமல் இருப்பவரையும் யாரும் போராட வைக்க முடியாது. ஏனெனில் அதுவும் தன்னெழுச்சி தான். "போராட வேண்டாம்" என்று தீயா வேலை செய்யிற தமிழன் இப்ப ஒரேயொரு ஆள்தான். அது முரளி.

ஆனால், அந்தாளை ஒண்டும் சொல்ல மாட்டீங்கள். ஏனெனில் அந்தாள் உங்க ரகம்! நாங்கள் சொல்றதெல்லாம், போராடுங்க. ஆனால் இது போதாது. போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துங்க. கோத்தாவை வீட்டுக்கு அனுப்பினால் மட்டும் போதாது. 226 பேரையும் வீட்டுக்கு அனுப் பினால் போதாது. அதோடு சேர்த்து மகாவம்ச மனோபாவத்தையும் கல்லறைக்கு அனுப்பிற அளவுக் குப் போராடுங்கள்.

இது அதற்கான அரிய சந்தர்ப்பம். இதை விட்டால் வேறை சந்தர்ப்பம் சூழல் இப்போதைக்கு வராது.

ஆழமாக சிந்தியுங்கள்.

நெருப்பாக மாறுங்கள்.

சிங்களச் சகோதரர்களை தூண்டுங்கள்.

சும்மா கூட்டத்தோடு கூட்டமாக கோசம் போட்டிட்டு வராதீர்கள்!

---

05. எப்படி "இனவாதம்" ஒரு அரசியல் மூலதனமோ... அவ்வாறே "இன ஒற்றுமையும்" ஒரு அரசியல் மூலதனமே.

மக்களின் நோய்களைப் போக்குவதாகச் சொல்லும் மருந்துக் கம்பனிகள் ஒரு போதும் நோய் கள் இல்லாமல் போவதை விரும்புவதில்லை, அதை அனுமதிப்பதும் இல்லை. நோய் உள்ளவரைதான் அவர்கள் பிழைப்பு.

அவ்வாறே, "இன ஒற்றுமை" ஐ மூலதனமாகக் கொண்ட அரசியல்வாதிகளுக்கு "இன முரண்பாடு" எப்பவும் தேவையான ஒன்று. அது இல்லாமல் போனால் அவர்களின் அரசியல் பிழைப்பு இல்லாமல் போய்விடும். உண்மையில் இன ஒற்றுமைக்கான விஞ்ஞானபூர்வமான தீர்வு: "எல்லாத் தேசிய இனங்களினதும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்" ஆகும்.

இங்கே "இன ஒற்றுமை" பேசுகிற எல்லாரும் அதைத் தட்டிக் கழித்தே "இன ஒற்றுமை" பற்றிப் பேசுகிறார்கள். ஏனெனில் அவர்களுக்குத் தெரியும் அது தங்கள் பிழைப்பைக் கெடுத்துவிடும் என்று. இனவாதத்தை மூலதனமாக கொண்டவர் களுக்கும் வேண்டியது, "இன மோதல்தான்" இன ஒற்றுமையை மூலதனமாகக் கொண்டவர்களுக்கும் வேண்டியது "இன மோதல்தான்" ஆனால் என்ன, இனவாதத்தை மூலதனமாக கொண்ட அரசியல் வாதிகளை இலகுவில் அடையாளம் கண்டுவிடலாம். இன ஒற்றுமையை மூலதனமாகக் கொண்ட அரசியல் வாதிகளை அடையாளம் காண பல மடங்கு காலம் தேவை.

இன்று இலங்கை மக்கள், இனவாதத்தை மூலதனமாக கொண்ட அரசியல்வாதிகளை அடை யாளம் கண்டுவிட்டனர். மகிழ்ச்சி! ஆனால் அடுத்து ஆட்சியும் அதிகாரமும் இன ஒற்றுமையை மூலதன மாகக் கொண்ட அரசியல்வாதிகளின் கைக்குப் போகுமானால்...

இன்னும் 60 வருடங்களுக்கு இந்த நாட்டுக்கு விமோசனம் இல்லை.

(23 ஆம் பக்க தொடர்ச்சி)

களில் இருந்து பெற்றுக் கொண்ட அனுபவம். இதனால் தான் கோடாகோகம ஒன்றை உருவாக்க மக்கள் தயங்குகிறார்கள்"

மோதரவில் இருந்து வந்த விசேட பொலிஸ் படை என்னை நள்ளிரவில் தூக்கிச் சென்ற போது இதையே தான் நானும் உணர்ந்தேன். பின்னர், நான் ஒரு தமிழனாகவோ முஸ்லிமாகவோ இருந்திருந் தால் எப்படி உணர்ந்திருப்பேன் என்று என்னை நானே கேள்வி கேட்டுக் கொண்டேன்.

நாம் இதற்கான விடைகளை தேட வேண்டும். இதனால்தான் நாம் "அவர்களை" வீட்டுக்கு அனுப்ப வேண்டும். நாம் சுதந்திரமான மனிதர்களாக எழுச்சி அடைய வேண்டும்.

புதிய உத்தேச அரசியல் யாப்பும் ஈழத்தமிழருக்கான அரசியல் தீர்வும்

ஈழத்தமிழ் அரசியல் வரலாற்றறிஞர் மு. திருநாவுக்கரசு அவர்களால் 27.02.2022 அன்று நடாத்தப்பட்ட 'புதிய உத்தேச அரசியல் யாப்பும் ஈழத்தமிழருக்கான அரசியல் தீர்வும்' என்கிற உரையாடலின் இரண்டாவது பகுதி இங்கே பிரசுரமாகிறது.

அமெரிக்காவின் அரசியல் யாப்பை பாருங் கள், அமெரிக்கா நீண்ட வரலாறல்லாத மக்களைக் கொண்ட நாடு. குறிப்பாக 16 ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு துண்டு துண்டாக உதிரி உதிரியாக குடியே றிய மக்களைக் கொண்ட நாடு. அவர்களுக்கென்று புராணங்கள், இதிகாசங்கள், கலாச்சாரம், சொந்த நீண்டகால வரலாற்று பாரம்பரியங்கள் கிடையாது. துண்டு துண்டாக குடியேறிய குடியேற்றவாசிகளின் நாடு தான் அமெரிக்கா. எனவே அவர்களை நிர் வகிப்பதற்கு வெட்டொன்று துண்டு இரண்டாக சட்டம் தேவைப்படுகின்றது. அவர்களை இணைப்பதற்கும் வெட்டொன்று துண்டு இரண்டான வாள்வெட்டுப் போன்ற கூரிய நடைமுறை அவர்களுக்கு தேவைப் படுகின்றது. ஆகவே சட்டத்தால் அமெரிக்கா எனும் தேசத்தை கட்டுக்கோப்பாக இணைக்க வேண்டிய ஒரு அவசியம் இருக்கின்றது. அங்கு பண்பாட்டை விட சட்டம் முதன்மையான இடத்தை வகிக்கின்றது. குடி யேறிகள் என்பதே ஒரு பண்பாடு தான். அங்கே பலர் குடியேறியுள்ளதனால் ஒருவருக்குரிய பண்பாடு இல்லை என்பதனால் எல்லோருக்கும் பொதுவான சட்டம் பற்றிய விடயம் அங்கே முதன்மை பெற்றிருக் கின்றது. இவ்வாறாக ஒவ்வொரு நாட்டினுடைய அரசியல் யாப்பும் சட்ட அமைப்புகளும் வடிவம் பெற்று செல்வதனைக் காணலாம்.

இலங்கையினுடைய அரசியல் யாப்பை நாங்கள் பார்ப்பதற்கு இவ்வளவும் முன்னோட்டங் களாக உள்ளன. இதன் இரண்டாவது பகுதிக்குள் நுழையப் போகின்றோம். மனிதன் ஒரு அரசியல் பிராணி, அரசியலுக்கு உட்பட்டவன். அரசியல் என்பது நிறுவன அர்த்தத்தில் நிலத்தோடும் மக்களோடும் சம்பந்தப்பட்டது. எனவே காணியும் மக்களும் (land and people) தான் அரசியல். நாடோடிகளாக மனிதன் இருந்த காலப்பகுதி யிலேயே அரசுக்குரிய அம்சங்கள் தோன்றி

இருந்தாலும், அரசுக்குரிய நிறுவனக் கட்டமைப்பு கண்ணுக்குத் தெரியும் ஸ்தூலமான கட்டமைப்பு தோன்றியது நிலத்தில் மக்கள் நிரந்தரமாக குடியேறத் தொடங்கிய பின் தான். எனவே நிலமும் மக்களும் தான் ஒரு அரசினுடைய அடித்தளம். அரசியல் அதிகாரம் என்பதும் நிலத்திலிருந்தும், மக்களில் இருந்தும் தான் வருகின்றது. அரசு என்பது இனக்குழுவில் வேர்விட்டு இருந்தாலும், அரசு முழுமையான நிறுவன முறையோடு நிலத் தில் தான் வருகிறது. நிலத்தை விடுத்து ஒரு போதும் அரசைப் பார்க்க முடியாது.

தேசிய வாதம் என்பது தாயகம் (homeland) என்கிற கருதுகோளோடு வருகின்றது. எனவே தாயகம் இல்லாமல் ஒரு தேசிய இனம் இருக்க முடியாது. அரசியல் தீர்வு ஒரு மக்கள் கூட்டத் துக்கு வேண்டுமென்றால் அது நிலத்தை அடிப்படை யாக கொண்டதாக தான் இருக்க வேண்டும். ஒரு மக்கள் கூட்டம் என்று எடுத்துக் கொண்டால் குறிக் கப்பட்ட கூட்டமான நிலத்தை தான் அது கருதும். தேசிய இனம் என்றால் அது நிச்சயமாக தாயகத் தைக் கருதும். தாயகம் இல்லாமல் தேசியம் இல்லை. எனவே ஒரு அரசியல் யாப்பை பற்றியதான சிந்தனை ஒரு தேசிய இனத்திற்கு

இருக்க முடியாது. எனவே ஒரு தேசிய இனத்திற்கு அதன் தாயக சிந்தனையில் இருந்து தான் அது பிறக்க வேண்டும்.

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் தாயகம் பற்றிய சிந்தனை 1949 ஆம் ஆண்டு சமஷ்டிக் கோரிக் கையோடு தான் ஆரம்பமாகிறது. அதற்கு முதல் உதிரிகளாக யாரும் சொல்லியிருப்பார்கள். ஆனால் ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட நிலத்தோடு சம்பந்தப் பட்ட சமஷ்டித் தீர்வு என்பது 1949 ஆம் ஆண்டு தமிழ ரசுக் கட்சியினால் முன்வைக்கப்படுகின்றது. அது தாயகத்துடன் சம்பந்தப்படுகின்றது. அது வரைக்கும் நிலம் என்பது தமிழ்மக்களின் வாழ்க்கையில் சம்பந்தப் படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆனால் பின்நாட்களில் இந்த நிலத்தை தமிழரசுக் கட்சி கைவிட்ட வரலாறும் துயரகரமானது. அவர்களால் எழுதப்பட்ட ஒப்பந்தங் களில் கூட நிலத்தை அவர்கள் கைவிட்டிருக்கின் றார்கள். தமிழரசுக் கட்சி எழுதிய பண்டா செல்வா ஒப்பந்தத்தில் பிரதேச சபைகள் அமைக்கப்படுவது என்பது இருக்கின்றது. அந்த பிரதேச சபைகள் என்பது நிலத்தை அடிப்படையாக கொண்டது. ஆனால் டட்லி செல்வா ஒப்பந்தத்தில் மாவட்ட சபை என்று ஒன்று இருக்கின்றது. அது நிர்வாக மாவட்டங்களை மையமாக கொண்டது. அங்கு நிலம் சம்பந்தப்பட வில்லை. அந்த நிர்வாக அலகுகளுக்குள்ளே தான் டட்லி செல்வா ஒப்பந்தம் இருக்கிறது. அது நிச்சய மாக நிலத்தை வைத்து இல்லை.

இலங்கை அரசியலில் நிலத்தை அடிப்படை யாக கொண்டு சிந்தித்த முதலாவது யாப்பு வடிவம் என்று சொல்வதாக இருந்தால் அது 1928 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டு 1931 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த டொனமூர் கமிஷன் அறிக்கை. அதில் தான் மாகாண சபைகளைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று ஆலோசனை சொல்லப்பட்டிருக்கின்றது. இது தான் இலங்கையின் அரசியல் வரலாற்றில் பிரதேச ரீதி யான தீர்வு பற்றி தமிழ்மக்கள் தங்களுக்கு பொருத் திப் பார்க்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. ஆனால் சிங்கள மக்கள் 100 வீதம் பிரதேச ரீதியாக நிலத்தை மையமாக கொண்ட அரசியல் சிந்தனையை கொண்டி ருந்தார்கள். அவர்களின் தம்மதீவு கோட்பாடு என்பது இலங்கைத்தீவு முழுவதனையும் தாயகம் என்று கூறுகின்றது. இவற்றை நாம் விவரமாக பார்க்க வேண்டியது அவசியம். சிங்கள மக்களுடைய அந்த தாயக கருத்தை மேலெழுந்தவாரியாக பார்க்கும் பார்வையிலிருந்து நாங்கள் விடுபட வேண்டும்.

தமிழர் தரப்புக்கு நிலத்தை மையமாக கொண்ட பிரதேசசபைகளை வைத்து அளிக்கப் பட்ட முதலாவது தீர்வு கிழித்தெறியப்பட்டது. டொனமூர் யாப்பு எழுதப்பட்ட போதும் அது பரி சீலித்துப் பார்க்கப்படவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழான 13 ஆவது சரத்தின் கீழ் எழுதப் பட்டிருக்கிறது. அது யாப்பு திரிபுக்கு போயிருக்கிறது. அது ஒரு யாப்பு பின்னடைவுக்கு போயிருக்கிறது. இது இரண்டையும் இந்திய அரசு கடுமையாக கவனத்தில் கொள்வது அவசியமானது. எழுதப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் எப்படி யாப்பு திரிபுக் கும் பின்னடைவுக்கும் போனது என்பதை புரிந்து கொள்வதற்கு இலங்கை அரசியல் யாப்பை புரிந்து கொள்வது அவசியம்.

இலங்கையினுடைய அரசியல் யாப்பு புவி சார் அரசியல் அடிப்படையில் தான் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது என்பது மிகவும் அடிப்படையானது. பிரித்தானியர்கள் தமக்கு தேவையான புவிசார் அரசி யல் நலனுக்கு பொருத்தமாக யாப்புகளை வரைந் தார்கள். சிங்களவர்களுக்கு அது சாதகமாக இருந்தது. அதனை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். அதனை அவர்கள் பயன்படுத்தினார்கள். ஈழத்தமிழர்களின் வாழ்வும் புவிசார் அரசியலும் பின்னிப் பிணைந் திருக்கிறது. சிங்கள பௌத்தர்களுக்கும் அப்படித் தான். ஆனால் சிங்களவர்களுக்கு இந்தியாவோடு ஒட்டிய புவிசார் அரசியல் வாழ்வு என்பது ஒரு பூட்டாக அமைந்திருக்கிறது.

இந்தியாவில் தோன்றிய பௌத்தம் அங்கே சைவ, வைஷ்ணவ மதங்களினால் பலாத்காரமாக அழிக்கப்பட்டது, துரத்தப்பட்டது. இந்தியாவில் பௌத்த சமண மதங்களுக்கு எதிராக சைவ வைஷ்ணவ மதங்கள் பெரும் போராட்டங்களை நடத்தின. பெரும் எழுச்சிகளை ஏற்படுத்தின. இவற்றின் விளைவால் பௌத்தம் இந்தியாவில் இருந்து துரத்தப்பட்டது. அங்கே துரத்தப்பட்ட பௌத்தம் இலங்கையில் குடி புகுந்திருக்கிறது. பௌத்தம் எவ்வளவு தான் அகிம்சையாக இருந்

தாலும், இலங்கையில் அது ஒரு ஆதிக்க மதமாகவே இருக்கிறது. அது இலங்கையில் புகுந்த நாளில் இருந்து அதற்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. இந்தியாவில் அழிந்த பௌத்தம் இந்தியாவினுடைய அரசியல் கலாசார விஸ்தரிப்பினால் இலங்கையிலும் அழிந்துவிடும் என்கிற அச்சத்தை சிங்கள மக்கள் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தியாவுக்கு எதிரான அரண் தான் அவர்களுடைய உள்நாட்டு வெளிநாட்டு அரசியலின் பிரதானமான அம்சம். ஆகவே தான் சிங்களவர்கள் தங்களுடைய தம்ம தீபக் கோட்பாட்டை இந்தியாவுக்கு எதிரான கோட்பாட்டோடு வடிவமைத்தார்கள்.

1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா தனிச் சிங்கள சட்டத்தை கொண்டு வரும் போது தமிழகத்தினால் சிங்களவர்கள் விழுங்கப்பட்டு விடுவார்கள் என்கிற சிங்கள மக்களின் அச்சத்தை சொல்லி அதனை நியாயப்படுத்தினார். தமிழும் சிங்களமும் உத்தியோகபூர்வ மொழியாக வேண்டும் என்று 1944 ஆம் ஆண்டு இலங்கையினுடைய அரசாங்க சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பத்து ஆண்டுகளின் பின்பு அது நடைமுறைப்படுத்தப்படும் என்று தீர்மானத்தில் இருக்கிறது. அதனை நடைமுறைப்படுத்துவதற்காக 1953 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட நீதிபதி ஆதர் விஜயவர்த்தனா ஆணைக்குழு அதனை ஆய்வு செய்தது. அது நியமிக்கப்பட்டதன் நோக்கம், தமிழையும் சிங்களத்தையும் உத்தியோக மொழி ஆக்குவதற்கான வாய்ப்புகளை, அதற்கு தடையாக இருக்கின்ற காரணிகளை நீக்கி அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இலகுவான வழிமுறைகளை சொல்லி நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்வது தான்.

'தமிழையும் சிங்களத்தையும் உத்தியோக பூர்வ மொழியாக்கினால் தென்னிந்தியாவில் இருக்கும் தமிழால் சிங்களம் பாதிக்கப்பட்டுவிடும். எனவே தமிழையும் சிங்களத்தையும் உத்தியோக பூர்வ மொழி ஆக்குவதனை விட்டுவிட்டு தனியே சிங்களத்தை மட்டும் உத்தியோகபூர்வ மொழியாக்குவதாக இருந்தால் இந்தப் பணி இலகுவானதாக இருக்கும். சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களால் பாதிக்கப்பட மாட்டார்கள். தென்னிந்தியாவில் இருந்து வரும் புத்தகங்கள், ஆசிரியர்கள், அறிவு தமிழர்களின் அறிவை உயர்த்தும். சிங்களவர்களின் அறிவு தாழ்ந்து போய் இருக்கும். சிங்களவர்களுக்கு சிங்கள நூல்கள் மட்டும் தான் இருக்கிறது. தமிழர்களுக்கு தமிழ்நாட்டு நூல்களும் தமிழ்நாட்டு ஆசிரியர்களும் தமிழ்நாட்டு ஊடகங்களும் உண்டு. எனவே தமிழை விடுத்து சிங்களத்தை உத்தியோக பூர்வ மொழியாக்குங்கள்.' என ஆதர் விஜயவர்த்தன தன்னுடைய அறிக்கையில் எழுதினார்.

"அரசியல் தீர்வு ஒரு மக்கள் கூட்டத்துக்கு வேண்டுமென்றால் அது நிலத்தை அடிப்படையாக கொண்டதாக தான் இருக்க வேண்டும்"

இந்த அறிக்கையில் சொல்லப்பட்ட கருத்துகளால் உந்தப்பட்ட சிங்கள மக்கள் கொதித்தெழுந்தார்கள். 'தமிழ் எந்தக் காரணம் கொண்டும் உத்தியோகப்பூர்வ மொழி ஆகாது' என்றார்கள். தமிழை உத்தியோகபூர்வ மொழி ஆக்கக் கூடாது என்பதற்கான காரணம் எங்கிருந்து பிறந்தது? அது இந்திய எதிர்ப்பில் இருந்து பிறந்தது. ஈழத்தமிழர்களின் பக்கம் இருந்து அவர்கள் அதனை சிந்திக்கவில்லை. தமிழர்களுக்கு எதிரான அரசியல் சிங்களவர்களிடம் எங்கிருந்து பிறந்தது? இந்தியாவில் பௌத்தம் அழிந்தது போல இலங்கையிலும் இந்தியா பௌத்தத்தை அழித்துவிடும் எனவே பௌத்தத்தை காப்பாற்ற வேண்டும் என்பதிலிருந்து பிறந்தது.

இந்தியாவில் இருந்து காலத்துக்கு காலம் படையெடுப்புகள் நிகழ்ந்தன. நிசங்க மல்லன் என்கிற சிங்கள மன்னன் பௌத்த சிங்களவர் மட்டுமே இலங்கையில் மன்னனாக இருக்கலாம், எந்த இந்துவும் இலங்கையில் மன்னனாக முடியாது என கல்வெட்டில் எழுதி வைத்திருக்கிறான். அசோகப் பேரரசின் எழுச்சியோடு இலங்கை மதத்தின் பெயரால் இந்தியாவின் செல்வாக்குக்கு ஆட்பட்டது. அது மதத்தின் பெயரால் ஆதிக்கமாகவே படர்ந்தது. ஆனால் சிங்களவர்கள் அதனை வேறுவிதமாக கையாண்டார்கள். அந்த இராஜதந்திர நடைமுறை என்பது மிகவும் நுணுக்கமானது. இந்தப் பிரச்சினையை சிங்கள தலைவர்கள் நீண்டகாலமாக கையாண்டிருக்கும் நடைமுறை என்பது மிகவும் மெருகானது. உலகமே அவர்களிடம் படிக்க வேண்டிய மெருகு அங்கு உண்டு.

இப்படியாக இந்திய எதிர்ப்பு வாதத்தை தான் தமிழர்களுக்கு எதிரான அரசியலுக்கான அடிப் படையாக சிங்களவர்கள் செய்தார்கள். இந்தியா என்கிற பெரிய நாடு அருகில் இருக்கும் போது அதன் ஆதிக்கம் இலங்கையில் படரும். அப்படி படர தமிழர்கள் காரணமாக இருப்பார்கள். 1970 களின் மத்தியில் சிறில் மத்தியூ என்பவர் ஒரு நூலை எழு தினார். அதில் சிங்கள மக்களின் வினோதமான எதிரிகள் இந்தியர்கள் என்று அவர் எழுதி இருந் தார். தமிழர்களும் இந்தியர்களுமே சிங்கள மக்க ளின் எதிரிகள் என எழுதி இருந்தார். அதன் அட்டைப் படத்தை பார்த்தால் இந்தியாவில் இருந்து ஒரு அரக்கனின் கை இலங்கையை நோக்கி நீளும். அதன் ரோமங்களை பார்த்தாலே ஆணி போல இருக்கும். அதன் வலது கை இலங்கை தமிழர்களை உதவியாக கொண்டு இலங்கையின் கழுத்தில் தூக்கு கயிறை மாட்டி இந்தியாவோடு இழுத்துக் கட்டுகிறது. இப்படித் தான் அட்டைப்படம் இருக்கும். இந்தியாவோடு இலங்கையை இணைக்க தமிழர்கள் காரணமாக இருப்பார்கள் எனவே தமிழர்களை அழிக்க வேண்டும் என்பது தான் சிங்களவர்களினுடைய பிரதானமான அடிப்படை சிந்தனை. இங்கே தான் அரசியல் யாப்பு சிந்தனையைப் பற்றி நாம் தெளிவாகப் பார்க்க வேண்டும்.

முதலாவது விடயம் இது தான், அமெரிக்கா அரசியல்யாப்பை உருவாக்கிய போது அங்கே ஒரு விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டது. அமெரிக்க யாப்பின் ஐந்தாவது சரத்தில் செனட் சபையில் உறுப் பினர்களின் வாக்களிக்கும் தன்மையில் எந்த அரசி யல் யாப்பு திருத்தங்களாலும் மாற்றம் செய்ய முடியாது. ஒரு மாநிலத்திற்கு இரண்டு வாக்குகள் இருக்கின்றன. அளவால் மிகச்சிறிய மாநிலத்திற் கும் அளவால் மிகப்பெரிய மாநிலத்திற்கும் இரு செனட்டர்கள் தான் இருப்பார்கள். ஒரு இடத்தில் மாற்றுவது என்றாலும் முழு மாநிலங்களும் ஓமென்று வாக்களிக்க வேண்டும். குறிப்பிட்ட மாநிலம் அதற்கு ஒப்புக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் மாற்றவே முடியாது. அமெரிக்க அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டுவருவதற்கு இரு பிரதான விதிகள் இருக் கின்றன. ஒன்று, செனட் சபையும் பிரதிநிதிகள் சபையும் கலந்த காங்கிரசில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் அரசியல் யாப்பு திருத்தம் முன்மொழியப்படும். மாநிலங்களில் நான்கில் மூன்று மாநிலங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அப்படி ஏற்றால் தான் அது திருத்தத்துக்கு வரும். இந்நிலையில் 1790 ஆம் ஆண்டு அமெரிக்காவில் காங்கிரஸினால் முன் மொழியப்பட்ட ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அந்த திருத்தம் 1992 ஆம் ஆண்டு 202 வருடங் களின் பின்பு தான் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது மாநிலங்களின் நான்கில் மூன்று பெரும்பான்மை வரும் வரைக்கும் இழுபட்டுக் கொண்டே சென்றது. இது தொடர்பில் எங்களுக்கு சரியான அறிவும் அனுபவமும் அவசியம்.

அரசியல் யாப்பில் செனட்டர்கள் சம்பந்தமான விடயங்களில் மாற்றம் செய்யவே முடியாது. முழு மாநிலங்களும் ஒன்றாக வாக்களிக்காதவரை கட வுளாலும் மாற்ற முடியாது. பைபிளை தொட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றாலும் கடவுளுக்கும் அங்கே இடம் கொடுக்கவில்லை. அவர்கள் திட்ட வட்டமாக சட்டத் துக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு மாற்ற மும் செய்ய முடியவில்லை. இதனை நான் அழுத்தி சொல்வதற்கு தெளிவான ஒரு காரணம் உள்ளது.

அமெரிக்க அரசியல் யாப்பில் சமஷ்டி ஆட்சி முறை என்பது செனட் சபையை மையமாகக் கொண்டது. எனவே அமெரிக்க அரசியல் யாப்பில் சமஷ்டியின் முதுகெலும்பு என்ன என்றால் அது செனட் சபை தான். அந்த சபையினூடாகத்தான் ஆட்சி அதி காரங்களை பங்கிட்டு கொடுப்பதற்குரிய உரிமை கள் வழங்கப்படுகின்றன.

இலங்கையில் ஈழத்தமிழர்களுடைய அரசி யல் யாப்பு பிரச்சினை பற்றி பார்க்கின்ற போது எங்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கில்லை. எங்கள் உரிமைகள் நிராகரிக்கப்படுகின்ற விடயங்களை பார்ப்போம். அமெரிக்காவில் ஆட்சியதிகாரங்களில் எல்லா மாநிலங்களுக்கும் பங்கிருக்கிறது. அந்தந்த மாநிலங்களை அங்குள்ளவர்களே நிர்வகிக்கும் உரிமை உள்ளது. சமஷ்டி முறையில் அவர்களுக்கு மத்தியில் பங்கிருக்கிறது. மாநிலத்தில் உரிமை இருக்கிறது. இது சமஷ்டி ஆட்சி முறையின் பிரதான மான அம்சம். மாநிலத்தில் அவர்களின் உரிமை, மத்தியில் அவர்களின் பங்கு.

(அடுத்த இதழில் தொடரும்...)

IMF இனால் வரப்போகும் துன்பம்

தேவக குணவர்த்தன, அகிலன் கதிர்காமர்
சித்திரை 1, 2022 Daily FT,
தமிழாக்கம் – நிமிர்வு

சிங்கப்பூரை இலங்கை போன்று முன் னேற்றுவேன் என்று ஒரு முறை கூறினார் சிங்கப் பூரின் தந்தை லீ குவான் யூ. ஆனால், மக்களின் பொருளாதார நலன்களை கருத்தில் கொள்ளாது இனவாதத்தை மட்டுமே மூலதனமாக வைத்து அரசியல் செய்து இலங்கையின் பொருளாதாரத்தை அதல பாதாளத்தில் தள்ளியுள்ளன அடுத்தடுத்து பதவிக்கு வந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசாங் கங்கள். தன் சொந்த நாட்டு மக்களின் நியாய பூர்வமான உரிமைகளை மறுப்பதற்காக தனது சக்தியையும் மீறி வெளிநாடுகளிடம் கடன் வாங்கி ஒரு போரை இன்றும் நடத்திக் கொண்டிருக்கிறது சிறிலங்கா அரசு. அதன் விளைவாக இன்று தனது வெளிநாட்டு செலாவணி இருப்புகள் கரைந்துபோய் சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) கையேந்தும் நிலையில் உள்ளது.

சிறிலங்கா அரசு முள்ளிவாய்க்காலில் ஓர் இனவழிப்பை நடத்தி முடித்த பின்னரும் தமிழ் மக்களை அவர்களது தாயகத்தில் இராணுவ அடக்கு முறைக்கு கீழ் வைத்திருக்கிறது. அதற்காக பொருளா தாரத்தின் பெரும் பகுதியை பாதுகாப்பு படைகளுக்கு செலவிடுகிறது. தமிழ் மக்களின் உரிமைப் போரின் மீதான இராணுவ வெற்றியை காட்டி இச்செயற் பாட்டை சிங்கள மக்கள் மத்தியில் நியாயப்படுத்து கிறது. அரசின் இந்த இனவாத மதுவில் மயங்கிக் கிடந்த சிங்கள மக்களை இன்று ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி ஒரு உலுப்பு உலுக்கி யுள்ளது. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், அவர்களை கொல்ல அரசு பெற்ற கடன் சுமை அவர்களையும் பாதிக்கப் போகிறது என்பது தான் அபாக்கியமான நிலைமை.

இனவழிப்பு யுத்தத்தின் பின்னர் சிறிலங்கா வின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதாக கூறிக் கொண்டு தவறான கொள்கைகளை கடைப்பிடிக்கும் அரசாங்கம் சிறிலங்கா மக்களை எவ்வாறாக ஏமாற்றி யது என்பதை சித்தரித்தும், சர்வதேச நாணய நிதி யத்தின் நிதிக் கொள்கைகளை பின்பற்றுவதால் நாட்டு மக்களிக்கு வரப்போகும் துன்பம் பற்றியும் தேவக குணவர்த்தன மற்றும் அகிலன் கதிர்காமர் இணைந்து எழுதிய "பொருளாதார நிலைகுலைவும் IMF பின்னரான நெருக்கடியும்" (Economic Collapse and the post-IMF crisis) எனும் கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம். இக்கட்டுரை சித்திரை 1, 2022 அன்று சிறிலங்காவிலிருந்து வெளி வரும் Daily FT என்ற பத்திரிகையில் வெளி யானது.

லெபனான், கிரீஸ், மற்றும் ஆர்ஜன்டீனா போன்று அரச கடன் சுமையில் ஆழ்ந்திருக்கும் நாடு களுக்கு ஒரு முன்னுதாரணமாக சிறிலங்காவும் விரைந்து மாறி வருகின்றது. இதனால் சிறிலங்கா வுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் மற்ற நாடுகளுக்கு ஏற்பட்டவை போன்று இருக்கும் என்று தோற்றமளித் தாலும், சிறிலங்காவில் உருவாகிவரும் நெருக்கடி யின் தனித்தன்மைகளை விளங்கிக் கொள்ளுதல் முக்கியமானதாகும். பலருக்கு இதன் தீர்வு எப் பொழுதும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது: சர்வ தேச நாணய நிதியத்திடம் போங்கள் (go to IMF). அதே சமயத்தில் அரசாங்கம் இறக்குமதிகளை கட்டுப்படுத்தி உள்நாட்டு உற்பத்திகளை நோக்கி பொருளாதாரத்தை சமம் செய்வதற்கான முன்நட வடிக்கைகளை எடுக்காமல் விட்டு பெறுமதியான நேரத்தை விரயம் செய்து விட்டது. மேலும், எதிர்த் தரப்பில் இருக்கின்ற பலரும் IMF தான் தீர்வு என்ற

முடிவுக்கு வந்து விட்டார்கள். இதனால் அவர்களும் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றும் படி அர சாங்கத்தை நிர்ப்பந்திக்க தவறி விட்டார்கள்.

பொருளாதாரப் பிரச்சனையால் அரசாங் கம் தனது அதிகாரத்தை இழந்து வரும் இவ்வேளை யில் IMF உடனான ஒப்பந்தம் தவிர்க்க முடியாத ஒன்றாக தோன்றுகிறது. ஆனால் இதனால் ஏற்படப் போகும் சமூக விளைவுகள் பாரதூரமாக இருக்கும். சிறிலங்காவின் பேரம் பேசும் திறன் கடந்த இரண்டு ஆண்டுகளில் பெருமளவு குறைந்து விட்டது. IMF உட்பட வெளிநாட்டு சக்திகளுடன் பேரம் பேசுவதற்கு சிறிலங்காவிடம் ஒன்றுமே இல்லை எனலாம். அதேவேளை, இன்றைய பொருளாதார நெருக்கடி பற்றிய ஆய்வும் மிகவும் தவறான கருதுகோள்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக நவதாராள வாதிகள் நிதிப் பற்றாக்குறை (fiscal deficit), நடப்புக் கணக்குப் பற்றாக்குறை (current account deficit) இரண்டையும் போட்டு குழப்புகிறார்கள். அதனூடாக எமக்குள்ள முக்கியமான சவால் தொடர்பாக பொது மக்களை குழப்பி வருகின்றனர். இன்றைய பிரச்சனையின் மையமான ஏற்றுமதி இறக்குமதி சமநிலையின்மை மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் போன்றவற்றை உள்ளடக்கிய வெளிநாட்டுப் பரி மாணத்தில் கவனம் செலுத்துவதை அவர்கள் தவிர்க் கிறார்கள். அவர்களின் திறந்த சந்தை (free market) பொருளாதாரக் கொள்கையும் வர்த்தக தாராள மயமாக்கலும் (trade liberalisation) தான் எமது பொருளாதாரத்தின் உண்மையான விவரணம் என்று போலியாக காட்டப்பட்டுக் கொண்டிருக்கி றது. மக்கள் அதிகாரத்தில் இருப்பவர்களைத் தெரிவு செய்வதை தீர்மானிக்கும் அளவுக்கு இந்த சித்தாந்த சிதைவு ஆதிக்கம் செலுத்துகிறது. இது மக்களுக்குப் பெரும் துன்பத்தைத் தருவதோடு, நாட்டிற்கும் பேரழிவை ஏற்படுத்தும். அதாவது, தற்போதைய பொருளாதார மந்தநிலை சர்வதேச நாணய நிதியத் தின் வருகைக்குப் பின்னால் ஏற்படப்போகும் நெருக்கடியால் மேலும் அதிகரிக்கவே போகிறது.

தேய்ந்து போன வழக்கமான பொருளாதார கொள்கைகள்

கடந்த பல பத்தாண்டுகளாக சிறிலங்கா வின் பொருளாதார சுபீட்சத்திற்கு வர்த்தக மற்றும் பண தாராளவாதமே வழி என்று முக்கியமான பொருளியலாளர்கள் கூறி வருகின்றனர். 1977 இல் திறந்து வைக்கப்பட்ட பொருளாதாரத்தை கொண்டாடுவதில் தொடங்கிய அவர்களின் ஆய்வு மேற்படைப் பொருளாதாரத்தில் (macro economy) தொடர்ந்து வருகின்ற திடநிலையற்ற தன்மையை கண்டிப்பதாக மாறியுள்ளது. அவர்களின் அடிப்படை கருதுகோள் ஒன்றாகவே இருந்து வருகிறது. அதாவது சிறிலங்கா திறந்த வர்த்தகத்தை அரவணைத்தால் அது முதலீடுகளை ஊக்குவிக்கும், அது வளர்ச்சியைத் தூண்டும்.

தொழிற்துறைகளில் அரச முதலீடுகள் ஊக்கு விக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அரசாங்க தொழிற்துறை தொடர்பான ஒரு கொள்கை வகுக்கப்படுவதே ஊக்குவிக்கப்படவில்லை. திறந்த சந்தை முதலீடுகளை உறுதி செய்யும், அதனூடாக அரச வருமானம் அதிகரிக்கும் என்று கருதப்பட்டது.

மாறாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) அரசாங்கத்தின் வரவு வீதம் தொடர்ந்து சரிந்து சென்றது. அரச செலவுகள் 20% ஆக இருந்து கொண்டிருக்க அரச வருமானம் 14% ஆக இருந்தது. அது 9% அளவுக்கு கூட 2020 இல் குறைந்து காணப்பட்டது. இவ்வாறு அரசாங்கத்தின் செலவு அதிகரிப்பு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது, கொரோனா பெருந்தொற்று காலத்தில் கூட பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் எதனையும் அரசாங்கம் செய்யவில்லை என்பதைக் காட்டுகிறது.

அரசாங்கத்தின் நிதிச் சமநிலையின்மைக்கு முக்கிய காரணம் 2019 ஆம் ஆண்டு தேர்தல்களுக்குப் பின்னர் கொண்டுவரப்பட்ட வரிக்குறைப்பு ஆகும். எது எப்படியிருந்தாலும் நிதிச் சமநிலையின்மை என்பது நாடு நெருக்கடிக்குள்ளாகும் போது வரக்கூடிய ஒன்றுதான், ஏனெனில் தனியார் முதலீடுகள் குறை யும் போது அதனை சீர் செய்ய எந்த அரசாங்கமும் செலவை அதிகரிக்க வேண்டியே வரும். இது கடந்த 2 வருடங்களில் தெளிவாகத் தெரிந்தது. மேற்கு நாடுகள் கோவிட்–19 பெருந்தொற்று காலத்தில் பொருளாதார ஊக்க கொடுப்பனவுகளை தமது மக்களுக்கு வழங் கினார்கள். உண்மையில் அது போன்று சிறிலங்கா வும் செய்திருக்க முடியும், அதற்கான நிதியை உள் நாட்டில் கடனாக ரூபாய்களில் பெற்று இருந்தால். நாணயத்தின் பெறுமதியைத் தக்க வைக்கவும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கவும்

மிகவும் இறுக்கமான நிதித் தராதரங்கள் உள்நாட்டில் இருக்க வேண்டும் என்று நவதாராளவாத நிபுணர்கள் வாதிடுகிறார்கள். இந்த வெளிநாட்டுப் பண மூல தனங்கள் வெளிநாட்டுக் கடனை அதிகரிக்கின்றன, அல்லது அவை வந்த வேகத்திலேயே சென்று விடு கின்றன. இதனூடாக வெளிநாட்டு பொருளாதாரத் துறை பாதிக்கப்படக்கூடிய நிலைமைக்கு தள்ளப் படுகிறது. இந்தப் பின்னணியில் நாம் கேட்க வேண்டிய கேள்வி 'அந்நிய செலவாணி எதனை வாங்குகிறது?'

சிறிலங்கா உள்நாட்டில் தயாரிக்கப்படு பவற்றை மட்டுமே உபயோகிக்கும் ஒரு நாடு என்றால் வெளிநாட்டு செலாவணி பற்றி கதைக்க வேண்டிய தில்லை. ஆனால் அது இறக்குமதிகளுக்கான செலவை ஏற்றுமதிகளின் ஊடாக சரி செய்ய வேண்டும். அல்லது சுற்றுலாத்துறை, புலம் பெயர்ந் தவர்களின் பண அனுப்புதல்கள் போன்றவற்றின் ஊடாக சரி செய்ய வேண்டும். இங்குதான் நிபுணர் கள் நிதிப் பற்றாக்குறையையும் கொடுப்பனவு களின் சமநிலையையும் ஒன்றாகப் போட்டு குழப்பிக் கொள்கிறார்கள். நிதிப்பற்றாக்குறைக்கும் வெளி நாட்டுப் பொருளாதாரத்துக்கும் உள்ள உறவு துண்டிக் கப்பட முடியும். துண்டிக்கப்பட வேண்டும். இன்னொரு வகையில் சொல்வதானால், நிதிப்பற்றாக்குறை வெளிநாட்டுக் கடன்களினூடாக தீர்க்கப்படக் கூடாது. அது ஒரு குறிப்பிட்ட இடைக்கால எல்லைக்குள் நடை முறையிலிருக்கக் கூடிய மீள்சமநிலைப்படுத்தும் வரிகளினூடாக தீர்க்கப்பட வேண்டும்.

வர்த்தக தாராள மயமாக்கம் தனியாக நடந்து விடுவதில்லை. இந்த உண்மை பிரச்சனையை மேலும் சிக்கலாக்குகிறது. பணப் பரிமாற்றத்தை அடிப்படை யாக கொண்ட உலகமயமாக்கலின் பரந்த செயற் பாடானது இந்த வர்த்தக தாராள மயமாக்கத்திலும் பிரதிபலிக்கும். மூலதனம் சுதந்திரமாக பாய்வதை தடை செய்யும் எதுவும் திறந்த சந்தையின் புனித மான கோட்பாடுகளை மீறுகின்றவையாக பார்க்கப் படும். சிறிலங்காவைப் பொறுத்தவரை 2007 ஆம் ஆண்டிலிருந்து பிணைமுறிகளை (sovereign bonds) விற்பனை செய்வதன் மூலம் சர்வதேச நிதிச் சந்தையில் அது தன்னை மேலும் வலுவாக பிணைத்துக் கொண்டது.

அந்த பிணைமுறிகளிலிருந்து கிடைக் கும் வருவாய் குறையத் தொடங்கியதும், வட்டி விகிதம் உயரத் தொடங்கியதும், மேலும் அதிக பிணைமுறிகளை விற்பனை செய்ய முடியவில்லை. இதனால் பழைய பிணைமுறிகளின் கொடுப்பன வுக்கு தேவையான பணத்தை திரட்ட முடியவில்லை. இதனால் இதுவரை சேமித்து வைத்திருந்த வெளி நாட்டு சேமிப்புக்களை பயன்படுத்த வேண்டி வந்தது.

உலகநாடுகளின் வெளிநாட்டு செலாவணி சேமிப்பு தொடர்பாக ஹாவர்ட் (Harvard) பல் கலைகழகத்தைச் சேர்ந்த டானி றொட்றிக் (Dani Rodrik), "வெளிநாட்டு செலாவணி சேமிப்பிற்காக ஏற்படும் சமூக பாதிப்பு (The Social Cost of Foreign Exchange Reserves)" என்ற கட்டுரையை எழுதியுள்ளார். அதில், நாடுகள் தமது குறுகிய கால கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக வெளி நாட்டுச் செலாவணியை சேமித்து வைப்பதாக கூறு கிறார். ஆனால் குறுகிய காலக் கொடுப்பனவு களை குறைப்பதில் கவனம் செலுத்தாது வெளிநாட்டு செலாவணி சேமிப்பில் நாடுகள் கவனம் செலுத்து கின்றன. அதனால் அந்தச் செலாவணியை தமது உள்நாட்டுப் பொருளாதாரத்தில் முதலிடக்கூடிய பணத்திலிருந்து எடுப்பதாக அந்நாடுகளின் நடவடிக் கைகள் முடிகின்றன.

1997–98 களில் கிழக்கு ஆசியாவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் மலேசியா மூலதனக் கட்டுப்பாடு உட்பட ஒரு இரட்டைக் கொள் கையை நடைமுறைப்படுத்தியது. அப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள மற்றைய ஆசிய நாடுகள் படு பிரயத்தனப்பட்டன. அவற்றுடன் ஒப்பிடுகையில் மலேசியாவின் பொருளாதார மீட்சி இலகுவாக இருந்தது. அதற்கு மலேசியா நடைமுறைப்படுத்திய கொள்கைகள் தான் காரணம் என றொட்றிக் உட்பட பலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

இன்று இலங்கையில் உள்ள நெருக்கடி அதை விட பாரதூரமானதும் ஆழமானதும் ஆகும். ஏனெனில் இலங்கையின் பொருளாதார அடிப்படைகள் பலவீன மானவை. ஆனால், பொருட்களின் சுதந்திரமான பரிமாற்றத்துக்கு ஆதரவான தமது நிலை பற்றி எமது நிபுணர்கள் கேள்வி எழுப்பவில்லை. நடப்புக் கணக்கு பற்றாக்குறை அதிகரிப்பதால் வெளிநாட்டு முதலீட்டா ளர்களை மீண்டும் அணுகுவது அவசியம் என்றுதான் அவர்கள் கருதுகிறார்கள். இது உண்மையில் வெளி நாட்டு முதலீட்டாளர்களை கவர்வதற்காக பொது

மக்களின் நிதித்தேவைகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற அவர்களது கருதுகோளில் இருந்தே வருகிறது.

"மூலதனத்தை மாற்றியமைக்கும் திறனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது குறித்து எனக்கு இருக்கும் மிகப்பெரிய கவலை என்னவென்றால், அது லண்டன், ஃபிராங்க்ஃபர்ட் மற்றும் நியூயோர்க்கில் இருக்கும் முப்பதுகள் வயது மட்டத்தில் இருக்கும் ஒரு சில பொருளாதார ஆய்வாளர்களின் விருப்பு வெறுப் புகளுக்கு வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரக் கொள்கையை பணயம் வைக்கிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு நிதியமைச்சர் தனது நாட்டின் வளர்ச்சி இலக்குகளுக்கு முன்னுரிமை கொடுக்க மாட்டார். இந்த இரண்டும் தொடர்ந்து ஒத்துப்போகும் என்று நாம் நம்ப வேண்டுமானால் சர்வதேச மூலதனச் சந்தைகளின் செயல்திறன் மற்றும் பகுத்தறிவு ஆகியவற்றில் நாம் குருட்டு நம்பிக்கை வைத்திருப்பவர்களாக இருக்க வேண்டும்." இவ்வாறு "யாருக்கு வேண்டும் மூலதனத்தை மாற்றியமைக் கும் திறன்?" என்ற தலைப்பில் 1998 ஆம் ஆண்டு வெளியிட்ட கட்டுரையில் றொட்றிக் தெரிவிக்கிறார்.

IMF அறிக்கை

இப்போது IMF பங்குனி 25 இல் வெளி யிட்ட 4 ஆம் இலக்க அறிக்கையைப் பார்ப்போம். IMF பல பரிந்துரைகளை தருகிறது. நேரடி மற்றும் மறைமுக வரிகளை அதிகரித்தல், அவற்றுக்கு செய்யப்படும் செலவை மீளப்பெறக்கூடிய வகையில் எரிபொருட்களின் விலையை நிர்ணயித்தல், நிதித் துறையை பலப்படுத்தல், ரூபாயின் மதிப்பை குறைத் தல் என்பன பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கையின் நவதாராளவாத வல்லுநர்கள் அரசி யல்வாதிகளின் பெரும்பாலான சிந்தனையை வடி வமைத்துள்ளனர். நாட்டின் பிரச்சினைகளுக்கு IMF ஐ தீர்வாகக் கருதுமாறு அரசியல்வாதிகளை அவர்கள் ஊக்குவித்தனர். இறுதியாக நாடு நினைவுக்கு திரும்பி, இந்தப் பிரச்சனைக்கு ஒரே ஒரு பதில் மட்டுமே உள்ளது என்பதை அங்கீகரிக்கிறது என்று சொல்கிறார்கள். சிறிலங்காவை மேலும் மேலும் விளிம்பிற்குத் தள்ளிய அனைத்தும் இந்தக் கதையால் நியாயப்படுத்தப்படுகின்றன.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக IMF தன்னைப் பற்றி ஒரு முற்போக்கான பிம்பத்தை வளர்க்க முயற்சித்து வந்தது. ஆனால் இந்த பரிந் துரைகள் அதன் சிந்தனையின் வரலாற்று அர்த்தத் திற்கு மாறாக உள்ளன. முதலாவதாக, "வரி அதிகரிப்பு மற்றும் பொருளாதார அடிப்படைகளின் விரிவாக்க நடவடிக்கைகளின் ஊடாக, VAT மற்றும் வருமான வரிகளை வலுப்படுத்தும் சீர்திருத்தங்களில் கவனம் செலுத்த வேண்டும்." என்று சொல்கிறது. IMF நேரடி வரிகளைக் குறிப்பிட்டாலும், உண்மை என்ன வென்றால், சிறிலங்காவின் வரி வருவாயில் ஏறக் குறைய 80% ஏற்கனவே மறைமுக வரிகளில் இருந்தே வருகிறது. குறிப்பாக VAT ஐ வலுப்படுத்த IMF இன் பரிந்துரையானது அத்தியாவசிய பொருட்களின் விலையை மேலும் உயர்த்தும். இவ்வாறான நுகர்வோர் மீதான வரிகள் தவிர்க்க முடியாமல் ஏழைகளையே பாதிக்கின்றன.

அடுத்து, IMF, "நட்டமடைந்து வரும் பொது நிறுவனங்களால் ஏற்படும் நிதி அபாயங்களைக் குறைக்க, நிதிநிலைமையில் மாற்றம் செய்தலுக்கு இணையாக எரிபொருட்களின் விலை நிர்ணயத் திலும் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறது. இதன் அர்த்தம் என்ன என்பதை அஜித் கப்ராலே கச்சிதமாக உள்வாங்கி இருந்தார். CNBC பங்குனி 7 ஆம் தேதி வெளியிட்ட செய்தியில் "நாட்டின் கடுமையான எரிபொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, எரிபொருள் மற்றும் மின்சார விலைகளில் 'கடுமையான அதிகரிப்பை' செய்யுமாறு மத்திய வங்கி இலங்கை அரசாங்கத்திடம் 'மிகத் தெளிவான வேண்டுகோள்' ஒன்றை விடுத்துள்ளதாக அஜித் கப்ரால் தெரிவித்தார். இதனூடாக இயற்கை யாகவே இவற்றுக்கான தேவை குறையும்." என்று தெரிவிக்கிறது. இந்த உபாயத்தின் நோக்கம் தேவையை அழிப்பதாகும். உதாரணமாக, மக்கள் மின்சாரம் வாங்க முடியாவிட்டால், அவர்கள் வீடு களில் மின்விளக்குகளை பயன்படுத்தமாட்டார்கள்.

இது தனியார்மயமாக்கலுக்கு ஆதரவாக முன்வைக்கப்படும் தர்க்கம் என்பதுமட்டுமல்ல, அரசு நிறுவனங்கள் லாபகரமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படை நம்பிக்கையிலிருந்து வருவதாகும். மக்களின் அத்தியாவசிய சேவைகளுக்கு உத்தர வாதம் அளிப்பதற்காக இருக்கும் அரச நிறுவனங்

களின் நோக்கம் மறக்கடிக்கப்படுகிறது. உலகெங் கிலும் உள்ள மற்ற எல்லா நாடுகளும் நட்டத்தை ஏற்படுத்தினாலும் அத்தியாவசிய சேவைகளுக்கான பொது நிறுவனங்களை தொடர்ந்து செயல்படுத்து கின்றன. ஆனால், சிறிலங்கா நெருக்கடியின் தன்மை காரணமாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என்று தெரிந்தும், அரச செலவுகளை குறைக்க வேண்டும் என்பதற்கான உதாரணமாக IMF இதை முன்மொழிகிறது. எரிசக்தி மானியங்களின் பலன்களை பணக்காரர்கள் அனுபவிக்கிறார்கள் என்ற கருத்து ஒருபுறம் இருக் கிறது. மறுபுறம், இவ்வளவு அதிக மின்சாரச் செலவை அவர்களால் மட்டுமே தாங்க முடியும். ஆக, எதிர் காலத்தில் பணக்காரர்களுக்கு மட்டும் மின்விளக்கு கள் இருப்பதையே இந்த தீர்வு உறுதி செய்கிறது.

இறுதியாக, நிதித்துறையை பலப்படுத்து வதுடன் கூடுதலாக செய்யப்பட வேண்டியதை IMF தனது அறிக்கையில் தெரிவிக்கிறது. "வெளிப் புற நிதிநிலைமையை சரி செய்வதற்கும் சர்வதேச இருப்புக்களை மீண்டும் உருவாக்குவதற்கு சந்தை நிர்ணயிக்கும் நெகிழ்வான பண மாற்று விகிதத்திற்கு படிப்படியாக திரும்ப வேண்டும்." என்று சொல் கிறது. இந்த முழு நெருக்கடியும் சிறிலங்காவின் வெளி நாட்டுக் கடன் சுமைகளின் காரணமாக உருவாக்கப் பட்டு இருப்பதனால், இங்கே சொல்லப்படும் தீர்வாகிய முதலீட்டாளர்களால் உணரப்படும் அபாயங்களை ஈடுசெய்வதற்காக நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் இருந்து பணத்தை எடுப்பது என்பது மற்றொரு பயனில்லா நடைமுறையாகும். இந்த வழியில், நாடு ஊக மூலதன வரவுகளுக்கு ஒரு கவர்ச்சிகரமான காந்தமாக மாறும். இதன் மூலம் அதே சுழற்சி மீண்டும் தொடங்கும். அதேவேளை, 1930 களிற்குப் பின்னரான மிக மோசமான மந்த நிலை IMF திட்டத்தால் உருவாகும். அது உழைக்கும் மக்களை நிரந்தரமாக ஏதுமற்ற மக்களாக மாற்றும்.

மக்களின் துன்பம்

IMF அறிக்கையிலிருந்து தோண்டி எடுக்க இன்னும் நிறைய உள்ளன. "ஏழைகளுக்கு ஆதர வானது" என்று காட்டப்படும் அதேவேளை அதற்கு முரண்பாடான நடவடிக்கைகள் வலியுறுத்தப்படு கின்றன. பாரதூரமான வழிகளில் நிதித்துறையைப் பலப்படுத்துவதையும் சிக்கனத்தை கடைப்பிடிப்பதை யும் அவ்வறிக்கை வலியுறுத்துகிறது. இந்த நடவடிக் கைகள் பல நாடுகளில் அரசாங்க உதவிகளையும், முதலீடுகளையும் மறுத்து, அந்நாடுகளில் சமனான வளர்ச்சியை தடை செய்துள்ளன. ஆனால், IMF வந்த பின்னர் சிறிலங்காவின் நெருக்கடியானது எந்தப் பாதையில் செல்லும் என்று கோடிட்டுக் காட்டு வது மிகப்பெரிய சவாலாகும். பொருளாதாரத்தை புரிந்து கொள்ளலில் உள்ள அபாயகரமான தவறு காரணமாக, IMF தான் ஒரே தீர்வு என்பது ஒரு மித்த கருத்தாக மாறியுள்ளது என்பது தெளிவாகிறது. இதனூடாக மாற்று வழிகளை சிந்திப்பது மறுக்கப் படுகிறது. ஆனால் நாம் இந்தப் புள்ளிக்கு இப்போது வந்து விட்டோம். இதன் பலனாக பெரும்பாலான மக்களுக்கு ஏற்படப்போகும் துன்பம் எப்படி இருக்கும் என்பது பற்றியும் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

சிறிலங்காவுக்கு நற்பேறு இருக்குமானால் மேலும் நிலைமையை இலாவகமாக கையாளு மேயானால், அது IMF ஐ விட மற்ற நன்கொடை யாளர்களிடமிருந்து நிதியுதவியை பெற்றுக் கொள்ள முடியும். உலக வங்கியிடம் இருந்து கூடுதல் நிதி யுதவியை சிறிலங்கா கோருவதாக ஏற்கனவே செய்திகள் வந்துள்ளன. இது நடக்கமுடியாத ஒன்றல்ல. பல்வேறு முரண்பாடான புவிசார் அரசியல் காரணமாக, அமெரிக்கா, சீனா, இந்தியா, மற்றும் ஏனைய மேலாதிக்க சக்திகள், சிறிலங்காவை பாதுகாப்பதில் உள்ள நன்மைகளை காணக்கூடும். ஆனால், சிறிலங்காவின் சார்புப் பொருளாதாரம் காரணமாக அது இந்த சக்தி வாய்ந்த நாடு களுக்கு அடிமையாகப் போவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இதனை சொத்துக்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக நாம் ஏற்கனவே பார்த்து இருக்கிறோம். நாடு மிகவும் பலவீனமாக உள்ளது. எனவே அதன் பேரம் பேசும் திறன் மிகச் சிறியது. கேள்வி என்னவெனில் எந்த சொத்துக்கள் துரித விற்பனைக்கு பரிசீலிக்கப்படும், எந்தெந்த சொத்துக்கள் கூட்டு எதிர்ப்பின் மூலம் பாதுகாக்கப் படும் என்பதுதான்.

இந்தச் சூழலில், அத்தியாவசியப் பொருட் களின் விலைகளை மேலும் உயர்த்துவதும், மக்களுக்கு அடிப்படைச் சேவைகள் கிடைப்பதை மறுப்பதும் மக்களின் துன்பத்தை நீடிக்கும். மிகப்

பெரிய சமூக அமைதியின்மைக்கான சூழலை உருவாக்கும். அதே நேரத்தில், வணிகங்களும் பாதிக்கப்படும். பொருட்களுக்கான தேவை சரிந் தால், உள்ளூர் பொருளாதார பொருட்கள் மற்றும் சேவைகளை யார் வாங்குவார்கள்? உயரடுக்கு வர்க்கத்தினர் சர்வதேச வர்த்தகத்திலிருந்து பலன் களைப் பெறலாம். ஆனால் உள்ளூர் சந்தையை நம்பியிருப்பவர்களுக்கு, பொருட்களின் உடனடி தட்டுப்பாடு தீர்க்கப்பட்டாலும், மேலும் வேதனையை மட்டுமே எதிர்பார்க்க முடியும். இறுதியில், உள்ளூர் பொருளாதாரச் சுருக்கம், இறப்பு விகித அதிகரிப்பு போன்ற வாழ்க்கைச் சுட்டிகளினூடாக வெளிப்படும். கிரீஸ் தனது சிக்கனத் திட்டத்தை அமுல்படுத்திய போது அனுபவித்த சமூகப் பேரழிவைப் போலவே, சிறிலங்கா ஒரு பத்தாண்டு அல்லது அதற்கும் மேலான காலத்தை இழக்கும் விளிம்பில் உள்ளது.

இவை அனைத்தும் அரசியல்வாதிகள் வாக்குகளைப் பெறுவதற்காக மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளால் உந்தப்பட்ட கட்டுப்பாடற்ற செல வீனங்களின் தவிர்க்க முடியாத விளைவுகளாக நவதாராளவாத வல்லுனர்களுக்குத் தோன்றலாம். ஆனால் உண்மையான புள்ளிவிவரங்களைப் பார்க் கும்போது, "கையளிப்புகள்" என்று அழைக்கப் படும் இந்த செலவீனங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை என்பதை நாம் காணலாம். கோவிட்–19 தொடர்பான செலவுகள் 2020 ஆம் ஆண்டில் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் வெறும் 0.8% மட்டுமே. மேலும் உதாரணமாக பார்க்கப் போனால், பெரும் கடனை செலுத்துவதை பின்போடுவதற்காக வணிகர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளினூடாக அவர்கள்தான் அதிக பயனடைந்திருக்கிறார்கள். இறுதியாக, ஏனைய காரணங்களை கற்பனை செய்து பார்க்க முடியாத பலருக்கு வசதியான சாக்குப்போக்காக 'ஊழல்' எனும் சொல் சாதகமாக இருந்து வருகிறது. ஆனால் அது பொருளாதார நெருக்கடியின் இயக்கவியலை விளக்கவில்லை.

இந்த காலப்பகுதி முழுவதிலும் சாதாரண மக்கள் குறைவான பொருட்களையே பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருந்து உள்ளனர். அதன்படி, இந்த நெருக்கடி தங்களுடைய தவறு அல்ல என்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். மேலும் மக்கள் அரசாங்கத்தை மாற்றுவதில் வெற்றி பெறுவார் களேயானால், அதனூடாக கிடைக்கும் உந்துதல் காரணமாக IMF வருகையின் பின் நெருக்கடி ஆழமடையும் போது அவர்களிடமிருந்து மேலும் கிளர்ச்சியை எதிர்பார்க்கலாம். உலகின் பிற பகுதி களில் அடிக்கடி நிகழ்ந்த உணவுக் கலவரங்கள் மற்றும் சிக்கன எதிர்ப்புப் போராட்டங்கள் போன்ற நிகழ்வு களைக் கூட நாம் இங்கு பார்க்க முடியும்.

முற்போக்கான மாற்றுச் சிந்தனைகள்

இப்போதைக்கு, எதிர்க்கட்சிகள் இந்தப் நெருக்கடிகளைக் கையாள்வதைப் புறக்கணிப்பதில் திருப்தியடைந்து வருகிறார்கள். அரசாங்கம் வீழ்ச்சி யின் விளிம்பில் இருப்பதாகவும், தமது சொந்த புகழ் அதிகரித்து வருவதாகவும் நம்புகிறார்கள். ஆனால், தொழிற்சங்கங்களும், மக்களின் துன்பத்தை உணரும் மற்ற முற்போக்கு சக்திகளும் IMF ஏற் பாட்டின் தர்க்கம் பற்றியும் அதனால் மக்களுக்கு ஏற் படப் போகும் துன்பங்கள் பற்றியும் விவாதிக்க வேண்டிய நேரம் இது. நெருக்கடியின் காரணங்கள் மற்றும் விளைகள் என்ன என்பதை நாம் அறிந்தால், தீர்வுகளை கற்பனை செய்வது எளிதாகும்.

எடுத்துக்காட்டாக, அந்நியச் செலாவணி நெருக்கடியை சமாளிக்க இறக்குமதிகளை தரப்படுத்த வேண்டும். இதில் எந்தப் பொருட்கள் இன்றியமை யாததாகக் கருதப்படுகின்றன என்பதை ஒரு இணக்க மான முறையில் முடிவு செய்வது தவிர்க்க முடியாதது. ஆனால் உணவு, மருந்துப் பொருட்கள், எரிபொருள் மற்றும் ஏற்றுமதி உற்பத்திக்கான இடைநிலை பொருட்கள் என்பவை மிக அடிப்படையானவையாக வரையறுக்கப்பட வேண்டும். இந்தத் தெரிவுக்கு பொரு ளாதாரம் பற்றிய நமது புரிதலில் வியத்தகு மாற்றம் தேவைப்படும். சிறிலங்கா வெளிநாட்டுத் துறையில் தங்கியிருப்பதை மேலும் வலுப்படுத்துகின்ற சுற்றுலா "சேவைகள் சார்ந்த" பொருளாதாரம் என்ற தெரி விலிருந்து நாம் விலக வேண்டும்.

மேலும், விலைவாசி உயர்வை எதிர்க்க முற் போக்கு சக்திகள் தயாராக இருக்க வேண்டும். மக்கள் குறைவாக நுகர வேண்டும் என்று கூறுவதற்குப் பதிலாக, மக்கள் வாழ்வதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யும் அடிப்படையில் பொருளாதாரத்தை மாற்றி அமைக் கும் தீர்வுகளை அவர்கள் வழங்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, எரிபொருள் நுகர்வு ஒரு பிரச்சினையாக இருந்தால், பெரும்பாலான மக்கள் மின் விளக்குகள் இல்லாமல் போக வேண்டும் என்று எதிர் பார்ப்பதை விட, முதலில் பணக்காரர்கள் உரியளவு பங்களிப்பு செலுத்துவதை உறுதிப்படுத்த தயாராக இருக்க வேண்டும். பணக்காரர்களுக்கு வழங்கப்படும் மானியங்களின் செலவை ஈடுகட்ட அவர்கள் அதிக செல்வ வரி கட்டுவதை உறுதி செய்ய வேண்டும். பொதுப் பிரச்சினைகளுக்கு கூட்டுத் தீர்வுகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை அதிகரிப்பதன் ஊடாக உண்மையான வளர்ச்சிப் பாதையை விபரிக்க வேண்டிய நேரம் இது. போராட்டங்கள் தெருக்களிற்தான் நடத்தப்படும் ஆனால் அப்போராட் டங்களின் கோரிக்கைகளை சாத்தியப்படுத்தக் கூடிய மாற்று வழிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு முற்போக்காளர்களிடம் உள்ளது. அதற் கான உண்மையான தலைமையை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பும் அவர்களிடமேயே உள்ளது.

குறிப்பு: தேவக குணவர்த்தன ஒரு சுயாதீன ஆராய்ச்சியாளர். அவர் கலிபோர்னியா லொஸ் ஏஞ்சலீஸ் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தைப் பெற்றவர். அகிலன் கதிர்காமர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றுகிறார்.

(03 ஆம் பக்க தொடர்ச்சி)

அபத்தமான விடயம். சிங்கள தலைவர்கள் இந்த தேசத்தை எப்படி பார்த்தார்கள்? அவர்கள் மக்களைப் பார்க்கவில்லை. மக்களுடைய எதிர்காலத்தை பார்க்கவில்லை. மக்களை பிரித்தார்கள். சிதைத் தார்கள். அறிவு ரீதியாக நிர்வாக ரீதியாக, பொருளா தாரம், தொழிநுட்பம் என பல துறைகளில் மிகவும் பங்களிப்பு செய்த ஒரு சமூகத்தை தமிழர்கள் என்று சொல்லி ஒதுக்கினார்கள். சிங்கள மக்களின் வாக்கு வங்கியை பெறுவதற்காக அவர்களை முன்நகர்த்து கின்றோம் என்று சொல்லி இந்த தேசத்துக்கு உன்னத மான பங்களிப்பு செய்து கொண்டிருந்த தமிழ் மக்களை புறக்கணித்து வெளியே தள்ளினார்கள். அவர்களுக்கு தேசம் பற்றிய கவலை இருக்கவில்லை. வாக்கு வங்கிக்காக சிங்கள மக்களை எப்படி அணிதிரட்டி பிரிப்பது என்று சிந்தித்து செயற்பட்டார்கள். இந்த தேசத்துக்கு என்று சொந்தமாக ஒரு பொருளா தாரத்தை கட்டமைக்கவில்லை.

இன்று வரை இந்த தேசம், இலங்கை என்கிற இந்த நாடு ஏழை மக்களின் கண்ணீரில் தான் கட்ட மைக்கப்பட்டிருக்கின்றது. இன்று வரை இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்றுமதி துறையில் மிக முக்கிய மாக பங்களிப்பு செய்கின்ற நான்கு துறைகள் என்ற வகையில் அதில் முதன்மையாக இருப்பது பெருந் தோட்டத் துறை தான். அதில் முழுமையாக உழைப் பது மலையக தமிழர்கள். மலையகத்தில் வாழ்கின்ற அந்த தமிழ் மக்கள் தங்களது கடின உழைப்பால் 150 – 200 வருடங்களாக தேயிலை தோட்டத்தில் உழைத்து அதன் ஏற்றுமதி மூலம் இலங்கையின் திறைசேரியை நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மக்களுக்கு குடியிருக்க சொந்தமாக நிலம் இல்லை. இப்பொழுது வீடு கட்டிக் கொடுக்கின்றார்கள். ஆனால் அந்த வீடு கட்டும் நிலம் அவர்களுக்கு சொந்தமல்ல. நிலத்துக்கான ஆவணத்தை கொடுக்காமல் வீட்டை கட்டிக் கொடுக்கின்றார்கள். மிகவும் கபடத்தனமான ஒரு சிந்தனை. 1000 ரூபாவாக கூலியை உயர்த்து மாறு கேட்டு கடந்த 4 வருடங்களாக போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அந்த மக்களின் உழைப்பு தான் இலங்கையின் தேசிய வருமானத்தின் முக்கிய ஏற்றுமதிப் பொருளாதாரமாக விளங்கு கின்றது.

இரண்டாவது மத்திய கிழக்குக்கு போகின்ற கூலியாட்களின் வருமானம். இது இன்னொரு மக்களின் கண்ணீர். மத்திய கிழக்குக்கு பணிப் பெண்களாக, கூலியாட்களாக போவது என்பது இந்த நாட்டின் மத்திய தர வர்க்கமோ அல்லது அதற்கு மேலுள்ள வர்க்கமோ அல்ல. ஏழை மக்கள் தான் பெரும்பாலும் போகின்றார்கள். பணத்துக்காக போன பலர் பிணமாக, குற்றுயிராக, ஊனமாக்கப் பட்டு, உழைத்த கூலி கிடைக்காமல் திரும்ப வரு கின்றார்கள். ஆனால் இவை எதையுமே இந்த அரசாங் கம் தனது வெளிநாட்டுத்துறை மூலம் கேட்காது. ஏனெனில் கேட்டால் அந்த தேசங்கள் உழைப் பாளர்களை வேண்டாம் என்று சொல்லி விடும் என் கிற காரணத்துக்காக ஆகக் கூடியளவு சுரண்டலுக் குள் தன் மக்களை உட்படுத்திக் கொண்டு அவர்கள் உழைக்கின்ற காசை தனது வெளிநாட்டு செலாவணி வருமானமாக காட்டி பெருமைப்படுகின்ற தேசம் என்று சொன்னால் இது கண்ணீரால் கட்டி எழுப்பப் பட்ட தேசம் தான். **(அடுத்த இதழில் தொடரும்...)**

(24 ஆம் பக்க தொடர்ச்சி)

வலுப்படுத்துவதோடு, இந்த போராட்டத்துக்கு உல கெங்கும் அபிமானத்தையும் நம்பகத்தன்மையை யும் கொண்டு வரும் இந்தத் தீவில் உண்மையாகவே புதிய மாற்றத்தை மலரச் செய்யும்.

அந்த நடவடிக்கை இதுதான்: தமிழ் ஊடகவியலாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர் களின் தாய்மார்கள், நீதிமன்றங்களாலும் பொலிசா ராலும் துன்புறுத்தப்படாமல் உண்மையைப் பேசு வதற்கும், இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவும் விரும்புவோர் அனைவருக்கும் ஆதரவாக மாபெரும் சிங்கள பேரணிகள் நாடாத்தப்படுவதே.

நீங்கள் இதைச் செய்வீர்களேயானால், ராஜபக் சக்கள் தாங்கள் ஏறி அமர்ந்திருக்கும் கோபுரங் களிலிருந்து பார்க்கும் போது தமது சக்தி உண்மை யிலேயே முற்றிலும் உடைக்கப்பட்டு விட்டது என்பதை உணர்வார்கள். நான் உங்களுக்கு உறுதியாக சொல் கிறேன், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையையும், பயங்கரவாத தடைச்சட்டத் தையும் நாம் தெருக்களில் அழித்து விட்டால், அதனை பாராளுமன்றத்திலும் அழிப்பதைத் தவிர வேறு வழி இருக்காது.

எல்லோருக்கும் போராடுவதற்கான உரிமைகள் சமமாக கிடைப்பதில்லை

–றையி கலி பால்தசார் (@VraieB)

என்னைப் போன்ற இன்றைய சந்ததி யினருக்கு, முக்கியமாக கொழும்பைத் தளமாக இருக்கும் பலருக்கு காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டங்கள் எமது வாழ்க்கையில் முதலாவதாக இருக்கலாம். எமது வரலாற்றில் இதற்கு முன்னர் பல வழிகளிலும் தமது எதிர்ப்பை தெரிவித்தவர்களின் அர்ப்பணிப் பையும் உறுதியையும் வேட்கையையும் இந்த அனுபவத்தின் ஊடாக நாம் நினைத்துப் பார்ப்போம் என நான் எதிர்பார்க்கிறேன்.

போராட்டம் என்பதே அவர்களின் வாழ்வின் இருப்புக்கான வழி என்று ஆகிப்போனவர்களை நினைத்துப் பார்க்க வேண்டிய அவசியத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு நாம் இருக்கிறோம். அவர்கள் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கேள்வி கேட்டு போராடிக் கொண்டிருப்பவர்கள். நீதிக்காக, தமது துயரத்தை ஆற்றுவதற்காக தாய்மார்கள். அவர்களை நாம் நினைத்து பார்க்க வேண்டும்.

காணிகளின் உரிமைக்கான அவர்களின் போராட்டத்தை நாம் அங்கீகரிக்க வேண்டும். சுத்த மான குடிநீருக்காக, தரமான கல்விக்காக, தொழி லாளர் உரிமைக்காக போராடுபவர்களை நாம் அங்கீகரிக்க வேண்டும். இவை பல பத்தாண்டுகளாக எம்மால் (கொழும்பில் இருப்பவர்களால்) கவனிக்கப் படாமல் இருந்திருக்கின்றன. இப்போராட்டங்கள் எல்லாம் அரசாங்கத்தால் வன்முறை கொண்டு அடக்கப்பட்டுள்ளன.

கடைசியாக, எல்லோருக்கும் போராடுவதற் கான உரிமைகள் சமமாக கிடைப்பதில்லை என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். எல்லாப் போராட் டக்காரர்களுக்கும் இன்று எமக்கு கிடைத்திருக்கும் இடைவெளி போன்று கிடைக்கவில்லை. போராட்டங் களால் சிலருக்கு வேலை பறிபோயிருக்கும். சிலருக்கு வாழ்வாதாரம் பறிபோயிருக்கும். சிலர் உயிர்களைக் கூட இழக்க வேண்டியிருந்திருக்கும். அவர்களுக் காகத்தான் நாம் கூடுதலாக போராட வேண்டும்.

நாம் இன்னும் நிறைய படிக்க வேண்டி இருக்கிறது.

நாம் சுதந்திரமான மனிதர்களாக எழுச்சி அடைய வேண்டும்

பண்டார (@A_Bandara94)

“கோடாகோகம (GotaGoGama) போன்ற ஒரு போராட்டத்தளத்தை ஏன் யாழ்ப்பாணத்தில் உருவாக்க முடியாது” என்று நான் கேட்ட போது எனக்குக் கிடைத்த பதில் இதுதான்:

“கோடாகோகம ஒன்றை யாழ்ப்பாணத்தில் உருவாக்கினால் அதனை பொலிசாரும் பாதுகாப்பு படையினரும் கையாளும் விதம் காலிமுகத் திடலைக் கையாளும் விதத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். இங்கு போராட்டத்தில் பங் கெடுக்கும் மக்கள் குறிவைக்கப்படுவார்கள். அவர்கள் காணாமல் போவார்கள் அல்லது பயமுறுத்தலுக்கு உள்ளாவார்கள். இதுதான் நாம் கடந்த காலங்

(11 ஆம் பக்கம் பார்க்கவும்)

ட்விட்டரிலிருந்து...

கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ் ஊடகவியலாளர்களை துரத்தும் புலனாய்வுப்பிரிவு

தெற்கில் சிங்கள மக்கள் அரசுக்கு எதிரான போராட்டத்தை ஒப்பீட்டளவில் சுதந்திரமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் அமைப்பின் செயலாளர் S.நிலாந்தன் மற்றும் அவரது குடும்பத்தினர் உறவினர்களை சித்திரை 21 அன்று பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் விசாரணை செய்துள்ளனர். அத்துடன் மட்டக்களப்பு பத்திரிகையாளர் சங்கத்தின் பொருளாளர் P.சசிகரன் மீதும் இவ்வாறான விசாரணை பாய்ந்துள்ளது. அவர்கள் தமது சமூக ஊடகத்தளங்களில் #GoHomeGota போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிப்பதன் மூலம் பிரவினையை ஊக்குவிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அந்த செய்தியை அடுத்து ஒரு சிங்கள எழுத்தாளரான வஜ்ர சந்திரசேகர (@_vajra) ட்விட்டரில் பின்வருமாறு கருத்து தெரிவித்து உள்ளார்.

சிங்கள வழக்கறிஞர்களே, ஊடகவியலாளர்களே, போராளிகளே #GotaGoGama இலும் ஏனைய போராட்டக் களங்களிலும் இந்த செய்திக்கு முக்கியத்துவம் கொடுங்கள். கடந்த 3 வாரங்களாக ஒற்றுமை மற்றும் தமிழருக்கு ஆதரவு என்றெல்லாம் தெற்கில் உள்ளவர்கள் கூறிவருகிறீர்கள். ஆனால், இங்கு ராஜபக்சக்கள் செய்ய முற்படுவது அவர்களால் திறம்படச் செயல்படுத்தப்பட்டதும் பழைமையான தந்திரம்: பிரித்தாளல்.

முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு பத்திரிகையாளர் சங்கம் உட்பட தமிழ் பத்திரிகையாளர்கள் சிங்கள பத்திரிகையாளரின் போராட்டங்களுக்கு எப்போதும் ஆதரவு அளித்து வந்துள்ளார்கள்.

தமிழாக்கம் – நிமிர்வு

அவர்கள் லசந்த விக்ரமசிங்கவின் நினைவு தினங்களை அனுட்டித்து வந்திருகிறார்கள். சில வாரங்களுக்கு முன்னர் சிங்கள பத்திரிகையாளரை பொலிசார் தாக்கிய பொழுது தமிழ் பத்திரிகையாளர்கள் வீதிகளில் இறங்கி அதற்கும் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்! அந்த சிங்கள பத்திரிகையாளர்களில் இனவாத அத தெரன (Ada Derana) வுக்காக பணியாற்றுவர்களும் அடக்கம்!!

ராஜபக்சக்களை வீட்டிற்கு (அல்லது பொருத்தமான வகையில் சிறைக்கு அல்லது ஹேக் (Hague) இற்கு) அனுப்புவது மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது ஆகியவை போராட்டக்காரர்களின் மிகப்பெரிய மற்றும் உரத்த கோரிக்கைகளாகும். எமது ஒற்றுமையில் விரிசல்கள் இருந்தாலும் இதில் நாம் உறுதியாக இருக்கிறோம். ஆனாலும், விரிசல்கள் போல் தோன்றுவது குறை பாடுகள் அல்ல. ஒரு வேளை அவை எவ்வளவு தூரம் பரந்துபட்ட மற்றும் மாறுபட்ட நலன்களின் கூட்டணி இங்கு கூடியிருக்கிறது என்பதற்கான அறிகுறிகளாக இருக்கலாம். இன்று முழு நாடுமே தெருவில் நிற்கிறது. நிச்சயமாக நிறைய விடயங்கள நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால், அனைவரின் முக்கிய கோரிக்கைகளும் ஒன்றுபட்டதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் இருந்தாலும், அந்தக் கோரிக்கைகள் தொடர்பான பெரும்பாலான நடவடிக்கைகள் இன்னும் நாடாளுமன்றத்தில்தான் நிறைவேற்றப்பட வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. அதனால்தான் அரசியல் வாதிகளை, போராட்டங்களை திசைதிருப்ப முயற்சிப்பதை விட்டுவிட்டு, பாராளுமன்றத்தில் தங்கள் வேலையை பாருங்கள் என நாங்கள் அழுத்தம் கொடுக்க முயற்சிக்கிறோம்.

ஆனால், அதே நேரத்தில், போராட்டக்காரர்கள் நேரடியாக களத்தில் செய்யக்கூடிய சக்தி வாய்ந்த, வன்முறையற்ற செயல் ஒன்று உள்ளது. இது எதிர்ப்புகளை அளவிட முடியாத அளவுக்கு

(23 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 27.04.2022 அன்று வெளியிடப்பட்டது